
# உறைக்கும் உண்மைகள்

- நிலா



# உறைக்கும் உண்மைகள்

நிலா

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 2010, அக்டோபர் |
| தாள் | : | 70 GSM |
| எண்ணிக்கை | : | 1000 பிரதிகள் |
| அச்சு | : | தி பிரிண்டர்ஸ் இந்தியா<br>திருச்சி-620 001, இந்தியா.<br>இ-மெயில் : theprintersindia@gmail.com |
| வெளியீடு | : | சிவம் தரம் பதிப்பகம் |
| விலை | : | ரூ.60/- |
| | | பிரித்தானிய பணம் : 5 பவுண்கள் |

## முன்னுரையாகச் சில வார்த்தைகள்

### உறைக்கும் உண்மைகள் –

### ஒரு துளியில் உலகைக் காட்டும் கதை.

நிலா அவர்கள் எழுதிய உறைக்கும் உண்மைகள் புதினம் வாசித்தேன். இயங்க முடியாத உடல்நிலையைத் தாண்டி அவர் எழுதியிருப்பதும்- எழுதிக் கொண்டே இருப்பதும் – மிகுந்த மதிப்பையும் அன்பையும் அவர்பால் கொள்ளச் செய்கின்றன.



வித்யா என்கிற இளம்பெண்ணின் வாழ்க்கையில் ஒரு சிறு பகுதியை மையமிட்டுச் சொல்லப்பட்டுள்ள இக்கதை, திணிக்கப்பட்ட ஓர் போர்ப்பின்னணியில், புலம்பெயர்ந்து தூரதூர தேசங்களுக்குச் சென்றலையும் எம் ஈழத்தமிழ்ப் பெண்டிர் வாழ்வின் ஒரு குறுக்குவெட்டாகத்தான் நமக்கு அர்த்தமாகி நிற்கிறது. உற்றார் உறவினர் இல்லாத, பரிச்சயமான நிலக்காட்சியும் இல்லாத ஒரு நிலப்பரப்பில், வித்யா ஒவ்வொரு நாளும் கொள்ளும் அச்சங்கள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், ஏக்கங்கள் இவற்றின் கதை வடிவாகவே இந்நாவல் விரிவு கொண்டுள்ளது.

வித்யாவுக்கு மனம் திறந்து ஆறுதலாகப் பேசிக்கொள்ளக் கிடைக்கும் ஒரே உறவான நர்மதா அக்காவின் வாழ்க்கை லண்டனில் மட்டுமல்ல – இங்கும் அன்றாடம் காணக்கிடைக்கும் ஒரு மத்தியதர வர்க்க வாழ்க்கைதான். நல்ல வாழ்க்கை வாழ வாய்ப்பிருந்தும் அதைச் சிதைக்கும் ஆண்கள் ஒவ்வொரு தெருவிலும் இங்கும் நாம் பார்க்கலாம். அதன் அசலான வடிவாக

நர்மதாவின் கணவன். ஆனால் அந்நாட்டுச் சட்டங்கள் பெண்ணுக்கு ஆதரவாக உடனே நடவடிக்கையில் இறங்கும்படியாக இருப்பதால் சித்ரவதை குறைவாக இருக்கிறது.

கேடுகெட்ட ஆணினத்தின் இன்னொரு பிரதிநிதியாக கதையில் வருபவன் சுஜித். வித்யாவின் வயது அவனை ஆரம்பத்தில் நம்பச்செய்து மனப்பூர்வமாகக் காதலிக்க வைக்கிறது. பெண்ணின் நம்பிக்கையைப் பெறும்வரை மகா யோக்கியனாகப் படம் காட்டிப் பின் சுயரூபம் காட்டும் ஆணாக சுஜித் கச்சிதமான பாத்திரப்படைப்பாக வரையப்பட்டுள்ளான். அவனது நேர் எதிரான நல்ல ஆணாக சயந்த் வருகிறான். ஒரு பெண்ணால் மிகச் சாமர்த்தியமாக ஏமாற்றப்படும் சயந்த்தின் கதை நம் நாடுகளில் காணக்கிடைக்காதது. வெளிநாடுகளில் வாழப்போய் வெளிநாட்டுப் பெண்களைக் காதலிக்கும் நம் பையன்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் சயந்த்தின் கதை அமைகிறது.

மாமியை மீறி வித்யாவுக்கு உதவும் பாலா மாமா ஒரு நல்ல ஆண் பாத்திரம். நாவலில் என்னை மிகவும் பாதித்த கதை மீனாவின் வாழ்க்கைதான். எவ்வளவு சின்ன வயசில் எத்தனை விதமான வாழ்க்கைகளை நம் ஈழத்துப் பெண் பிள்ளைகள் வாழ நேர்ந்துவிட்டது. அரச பயங்கரவாதத்தை இதைவிட அழுத்தமாக உணரவைக்க முடியாது. உலகத்தையே தன் கால்பந்தாக மாற்றி உதைத்து விளையாடிய ப்ரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தலைநகர் லண்டன் நம் மக்களுக்கு (இந்தியாவை விட) நல்ல புகலிடமாக இன்று திகழ்வது வருத்தமளிக்கும் உண்மையாக இந்நாவலில் விளக்கம் பெறுகிறது.

இந்நாவலில் ஓரிடத்தில் ஆசிரியர் குறிப்பிடுவது போல லஞ்சமும் ஊழலும் நம் நாடுகளிலிருந்து ஐரோப்பிய சமூகத்துக்குச் செல்லவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். லஞ்ச ஊழலின் பிறப்பிடமே இங்கிலாந்து அல்லவா? இராபர்ட் கிளைவ் இந்தியாவுக்கு வந்தபோதே

லஞ்சமும் சேர்ந்தே வந்ததல்லவா வரலாறு. பல்வேறு மக்கள் போராட்டங்களால் ஒரு மக்கள் நல அரசாக (welfare state) இந்த ஏகாதிபத்தியங்கள் தம்மைக் காட்டிக்கொள்ளும் ஏற்பாடுதான் இன்று அங்குள்ள சட்ட நடைமுறைகள் அல்லவா.

நாவலின் நடை வாசகரைச் சங்கடப்படுத்தாத சலசலவென ஓடும் நதியைப்போல அமைந்து எடுத்த கையோடு நாவலை முடிக்கும் மகிழ்ச்சியைத் தந்துவிடுகிறது. லண்டன் வாழ்க்கையை நேரில் கண்டிராத நம் போன்ற வாசகருக்கு இந்தச் சிறு பகுதி வாழ்க்கையைக் காட்டி ஒரு துளியில் இவ்வுலகைக் காட்டுவதுபோல அவ் வாழ்க்கையை இந்நாவல் காட்டி விடுகிறது. பல தகவல்கள் நமக்கு ஆச்சரியமாகவும் இருக்கின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கான அரசின் அக்கறை நம்மை ஏக்கம் கொள்ள வைக்கிறது. சிவில் சமூகம் விழிப்பாக இருக்கும் ஒரு நிலப்பரப்பில்தான் இதெல்லாம் நடக்கும்.

தான் கண்ட அவ்வாழ்க்கையைச் சொல்லுவதன் மூலம் இன்றும் அங்கு வாழும் நம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சில முக்கியமான செய்திகளை ஆசிரியர் இந்நாவலின் மூலம் சொல்கிறார். வாழ்வனுபவத்தின் சாரமாக வடிக்கப்பட்டுள்ள இந்நாவலை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். மேலும் பல நாவல்களை எழுத்தாளர் நிலா படைத்து எமக்கு வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அவருடைய தன்னம்பிக்கைக்கும் விடாமுயற்சிக்கும் படைப்புக்கான அயரா உழைப்புக்கும் மீண்டும் ஒருமுறை என் தலை தாழ்ந்த வணக்கங்கள்.

மிக்க அன்புடன்,
ச. தமிழ்ச்செல்வன்.

பத்தமடை
15.10.2010

## என்னுரை

ஈழத்தில் பிறந்து இங்கிலாந்தில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வாழும் நான், இரண்டு நாட்டு வாழ்முறைகளைக் கண்டவள் என்ற முறையிலும், சமகாலப் பதிவுகளைப் பதிதல் ஓர் இலக்கிய வாதியின் கடமை என்பதும் என் மனதில் இருப்பதால் இந்த எனது முயற்சி.

போரின் சூழலை அங்குள்ளவன் போல் எவரும் தத்ரூபத்துடன் உணர்ச்சிகரமாகப் பதிய முடியாது எப்படியோ, அது போல் தான் வெளிநாட்டு அனுபவங்களை வெளிநாட்டில் இருப்பவர்கள் தான் பதிய முடியும் என்பதால் நான் என் சிற்றறிவுக்கு இயன்றவரை ஓர் கதை வடிவில் என் உள்ளக்கிடக்கையை எழுத்துருவாக்கியுள்ளேன்.

எனது மூன்றாம் படைப்பாகிய 'நிலாவின் இந்திய உலா' சென்னையில் 29 ஆம் திகதி ஆகஸ்ட் வெளியாகி, பதினைந்து நாட்களின் பின் இப்புத்தகம் உருவாகத் தொடங்கியது. 24 ஆம் திகதி அக்டோபர் திருநெல்வேலியில் இந்நூலை வெளியீடு செய்ய என் அன்பு வட்டத்தினால் (இணையம் மூலம் இணைந்து இன்று ஓர் குடும்பமென ஆகிவிட்ட என் நண்பர்கள், கூடிப் பிறக்காவிடினும் கூடியளவு அன்பு சொரியும் வட்டத்தினரே என் அன்பு வட்டம்) ஆவன நடக்கின்றன. இரண்டே மாதங்களினுள் இந்நூலானது எழுதப்பட்டு... அச்சேறி... அரங்கேறுகிறது என்றால் நம்புவது சிரமமே!.

இந்த அவசரச் சூழலையும் சாதகமாக்க உதவிய என் தனிமைக்கும் நான் நன்றி சொல்ல வேண்டும். ஓசூரில் வைத்தியம் குறித்து நான் தங்கி இருப்பதால்

வரும் மட்டுப்படுத்தப்பட்ட தொலைபேசியழைப்புகளும் விருந்தினர்களும் கூடக் காரணம் எனலாம். ஆம்! 'மஸ்கியூலர் டிஸ்ரொபி' (Muscular Dystrophy) என்னை 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பீடித்து என் செயல்களைத் தடுத்து வைத்துள்ளதை, உடைக்கும் முயற்சியில் நான்.

காலம் வீணே கரைவதைச் சகிக்க முடியாத நான், இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். கடும் முயற்சிக்கு நிகர் எதுவும் இல்லையே!

நாடகங்கள் பல எழுதிய அநுபவம் எனக்கு உண்டெனினும் கதை, அதுவும் நாவல் எழுதுதல் இக்கன்னியின் கன்னி முயற்சியே. என்றாலும் சவால்கள் நிறைந்ததே வாழ்க்கை. எதிர்கொண்டு தான் பார்ப்போமே.

பலர் சொல்ல நினைப்பதை இக்கதை மூலம் நான் சொல்ல விழைகிறேன். இந்தக் கதையில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் கற்பனையே.

இந்நூலில் ஆங்கில உரையாடலை, இந்தக்கதையின் சூழல் அப்படி அமைந்துள்ளதன் காரணமாக அதே பாணியில் பதிய வேண்டியிருந்தமை தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

'உறைக்கும் உண்மைகள்' என்ற இந்த மலர் தங்கள் மனதில் என்ன தாக்கத்தை உண்டு பண்ணுகிறதோ, அதை எழுத்து வடிவில் இந்த மிகக் குறுகிய காலத்தில், எழுத்து வடிவில் தந்து நிற்கும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கப் பொதுச்செயலாளர், திரு ச.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் எனத் சிரந்தாழ்ந்த மனம் நிறைந்த நன்றிகள்.

இந்நூலை ஐம்பதாவது அகவை கண்டு நிற்கும் எனது பெரியண்ணா் திரு ப சிவகுமார் அவர்களின் அன்புக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்நூல் ஒரு சிலரையாவது சிந்திக்க வைத்தால் அதுவே என் எழுத்துக்கும் என் பாடுபடுதலுக்கும் கிடைத்த முழுவெற்றியென மகிழ்வேன். சுவைத்துப் பாருங்கள். உங்கள் விமர்சனத்தை மனம் திறந்து எழுதுங்கள். காத்திருக்கிறேன்.

எதிர்பார்ப்புடன்

அன்புள்ள நிலா


எனது முகவரி

Flat 1, Ithell Court
18, Crawford Avenue
Wembley,
Middx HA0 2HW
London, UK

மின்னஞ்சல் : nilaaa2001@gmail.com

இணையத்தளம் : www.nilamutram.com

தொலைபேசி : 00 44 208 795 5838
00 44 794 792 1211

# வாடிய மனது

பதினெட்டாம் இலக்கப் பேருந்தில் உட்கார்ந்திருக்கும் வித்யாவின் மனம் "எனக்கு இது தேவை தானா?" என்று கிடந்து அடிக்கிறது.

வித்யாவின் மாமா தனக்கு இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத் தருவார் என்று வித்யா எதிர்பார்க்கவேயில்லை. இவ்வளவிற்கும் வித்யா வெளிநாடு போகவேண்டும் என்று பெரிதாக ஆசைப்பட்டவளுமில்லை.

வித்யாவின் மாமா தான் அவளை இங்கு இங்கிலாந்திற்கு அழைத்திருக்கிறார். அவர் தான் வித்யாவின் குடும்பத்தவருக்கு எப்போதுமே அக்கறை காட்டுபவர்.

'அவள் நாட்டில்' இல்லையில்லை 'நாடு என்ற ஒன்று' அவளுக்கு இருக்கிறதா? அது தான் இல்லையே!! இலங்கையில் போர் தந்த அவலம் தான் தொடர்ந்த இடம் பெயர்தல் ஆச்சே!

அந்த அவலநேரங்களில் எல்லாம் .. அவர்கள் குடும்பத்தாருக்கு ஆதரவு காட்டுபவர் தான் வித்யாவின் அம்மா விஜயலட்சுமியின், அண்ணாவாகிய இந்த பாலா மாமா.

அவர் உதவி செய்வதுகூட அவர் மனைவிக்குத் தெரியாமல் தான். 'மாமி என்று அவர் மனைவியை அழைக்கக் கூட வித்யாவின் மனம் ஏவுவதில்லை. அந்தளவுக்கு வித்யாவின் மாமாவை ஆட்டிப்படைப்பவர் அவர் துணைவி.

வித்யாவை லண்டனுக்கு அழைப்பதற்குக் கூடத் தன் பத்திரங்களை ஆதாரம் காட்டி, பாலா மாமா வித்யாவை அழைக்கவில்லை. காரணம் மாமி அறிந்தால் அவருக்குக் கிடைக்கும் விவாகரத்துப் பத்திரம்!

ஹூம்! ஏதோ விதமாக நண்பர் ஒருவரின் உதவி பெற்று, இங்குள்ள 'மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் அனுமதி எடுத்து, இங்கு அழைத்து விட்டார் அவளை.

லண்டன் என்றதும் 'ஏதோ அழகான நகரம்' என்று பெரிய கற்பனைகளுடன் வந்தால் ஒருவித ஏமாற்றம் தான் வித்யாவுக்குக் கிடைத்தது. அதுவும் இந்த வெம்பிளியில் (Wembley)...........ஒரு பகுதியைப் பார்த்தால் கொழும்பு புறக்கோட்டைப் பகுதியைப் போலவே இருந்தது.

'எப்படியிருந்தா எனக்கென்ன? நான் தான் இங்கு வாழப்போறவள் இல்லையே! எப்படா இந்தப் படிப்பு முடியும் ? நான் படிச்ச படிப்புக்கு...... கொழும்பிலை 'அந்த மாதிரி' நல்ல வேலை கிடைக்குமே! வித்யா நினைத்துக்கொண்டாள்.

'இங்கு எவ்வளவு படித்தாலுமே படித்ததற்கேற்ற வேலை கிடைக்காதே. எது எப்படியோ இப்போதைக்கு, எனக்கு ஏதாவது வேலை தேடியாக வேண்டும். இருக்கும் சில ஐம்பது பவுண்களைச் செலவு செய்துவிட்டு என் வாழ்வு என்னவாகப் போகிறதோ!

'மாமாவை எவ்வளவுக்கென்று சார்ந்து வாழ்வது? இங்கு லண்டனில் வாழ்க்கைச் செலவு தான் அதிகமாச்சே! ஆணோ பெண்ணோ உழைத்துத் தான் வாழவேண்டியுள்ளதே!

'வேலை தேட வேண்டும்! வேலை தேடுவது ஒன்றும் சுலபமானது அல்லவே! அதற்கும் எத்தனையோ விதிமுறைகள்! வேலை கிடைப்பதென்றால் முக்கியமாக போதியளவு வேலை செய்ய அனுமதியுள்ள விசா அல்லது நிரந்தர வதிவிடவுரிமை அல்லது பிரஜாவுரிமை என்றெல்லாம் வேண்டுமே.

தான் மாணவி என்ற முறையில் லண்டன் வந்துள்ளதால் கிழமைக்கு இருபது மணிநேரம் தான் வேலை செய்ய முடியும்! (பெருமூச்சு விட்டுக்கொள்கிறாள்).

அதற்கும் எத்தனையோ படிமுறைகள், வேலை செய்வதற்கு அனுமதி இருக்கிறது என்றாலும் என். ஐ இலக்கம் (N I Number) பெற்றிருக்க வேண்டும். அதை எடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்றறியத் தான் இன்று போய்க் கொண்டிருக்கிறாள் இந்தப் பேருந்தில்.

ஹார்ல்ஸ்டனில் (Harlesden) பஸ் நின்றதும் ஓர் சக்கர நாற்காலிப்பயணி ஏறுவதற்காக, பஸ்ஸின் சாரதி ஓர் அழுத்தியை அழுத்த, நிலத்துக்கும் பேருந்தின் தளத்துக்கும் தொடர்புறும் வண்ணம் அமைந்த ஓர் சாய்வான தட்டு, நிலப்பகுதியில் அமையும் விதமாக அமைய 'அந்தத் தட்டின் உதவியுடன் மின்சாரச் சக்கர நாற்காலியில் வந்த பயணி பஸ்ஸில் ஏறிக்கொண்டார்.

வளர்முக நாடுகளில் சாதாரண பயணி பஸ்ஸில் ஏறுமுன்பாகவே பஸ் புறப்பட்டுவிடும்! இங்கு மனிதர்களை மனிதர்களாக நடத்துகிறார்கள். வாழ்க! மனிதநேயம்!

பயணி தன்னிருக்கையை, அவருக்கென ஒதுக்கியிருந்த பகுதியில், தன்னிலையை உறுதி செய்ததும் கண்ணாடியினூடு அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்திய சாரதி தனது பணியைத் தொடர்ந்தார்.

வித்யாவின் மாமா சொன்ன குறிப்பின்படி, இன்னும் இரண்டு தரிப்புகள் கடந்ததும், தனது தரிப்பிடம் வந்துவிடும் என்பதை உணர்ந்த வித்யா தனக்குள் படபடத்துக் கொண்டாலும் முகத்தில் சுதாகரிப்பை வெளிப்படுத்தினாள்.

இரண்டாவது தரிப்பிடம் கடக்கும் போது 'ஜொப்சென்ரர் பிளஸ் (Job Centre Plus) என்ற பெயர்ப் பலகையைப் பார்த்ததும் தன் நாக்கைக் கடித்துக்கொண்டாள். காரணம் அவள் இறங்கவேண்டிய தரிப்பிடம் தாண்டி பஸ் வந்துவிட்டது.

தவறுகளின் மூலமே நாம் பாடங்கள் கற்கிறோம் அல்லவா?

அலுவலகத்துச் சென்று வெளிவரும் போது அவள் வதனம் ஏமாற்றத்தால் சுருங்கியிருந்தது.

ஏதோவோர் தொலைபேசி எண்ணை, அலுவகத்திலுள்ள அதிகாரிகள் வித்யாவிடம் கொடுத்து வேறெங்கோவுள்ள, மற்றுமோர் அலுவலகத்திற்கு அழைத்து அவர்களைச்

சந்திப்பதற்கான திகதியைப் பெற்றுக் கொள்ளும்படி சொன்னதற்கிணங்க, அவள் அங்குள்ள தொலைபேசியில் சில குறிப்பிட்ட எண்களை அழுத்திப் பேசியிருக்கிறாள்.

மறுமுனையிலுள்ளோர், வித்யாவினது தொலைபேசி இலக்கத்தை அறிந்து கொண்டு பின்பு அழைப்பதாகக் கூறியிருப்பதால் தான், இந்த சோர்வு அவள் வதனத்தில்.

அவர்கள் எப்போது தன்னை அழைத்து, தனக்கு எப்போது இந்த என்.ஐ. இலக்கம் கிடைக்கப் போகிறது, என வருந்தி வித்யாவின் மனம் உற்சாகம் இழந்து தவித்தது!

# கனக்கும் மனது

படபடப்புடன் தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள் வித்யா!

இவளுள் உள்ள திறமை அத்தனையையும் தங்கள் நிர்வாகத்திற்கு, அதைச் சீர்செய்தலுக்குப் பயன்படுத்திவிட வேண்டுமென்ற துடிப்பு இவளது நிலையத்து நிர்வாகி மஞ்சுவுக்கு.

ஆம்! இலங்கைத் தமிழ்த் தம்பதியர் நடாத்தும் ஓர் கல்வி நிலையம் தான் அது. ஆயினும் மஞ்சு தமிழிலேயே வித்யாவுடன் கதைத்ததே இல்லை.

தமிழ் தெரிந்தவர்களுடன் தமிழர் தமிழில் உரையாடுதல் சிறப்புதான். அதுவே தொழில் ரீதியான இடமாக இருந்தால் அந்நாட்டு மொழியையோ அல்லது பலராலும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியைப் பேசுவது தானே சிறப்பு!

ஆகவே வித்யாவுக்கு அதுவொன்றும் பிரச்சனையாகவே தென்படவில்லை. இந்த ஒரு மாதமும் ஒருவர் விடுப்பில் சென்றுவிட (கட்டாய விடுப்பு என்று கூடக் கூறலாம், காரணம் ஒரு வருடம் வேலை செய்பவருக்கு ஒரு மாதத்திலும் மேலாக சம்பளத்துடன் கூடிய விடுப்புக் கொடுத்தே ஆக வேண்டும் என்பது எழுதப்பட்ட சட்டம்.) வித்யாவுக்கு இங்கு வேலை கொடுத்துள்ளனர்.

எதுவித சிபாரிசும் இல்லாமல் வித்யாவின் சொந்த முயற்சியில், எதிர்பாராமல் வித்யாவும் சென்று விசாரிக்க அவர்களும் அவளின் தகைமையில் மனம் பதித்துக் கொடுத்த ஒரு சந்தர்ப்பம் இது.

இங்கு ஒரு மாதம் தான் வேலை செய்யலாம் என்பதாலோ என்னவோ என் ஐ நம்பர் இல்லாமலேயே இவ்வேலையைக் கொடுத்து விட்டனர்.

வித்யாவின் தலையில் தனக்குள்ள கடனை நினைக்கும் போது ஒரே யோசனையாக இருந்தது. இந்தக் கடனை எப்படியும் விரைவில் அடைத்து விட வேண்டுமே. பல்கலைக் கழகத்திற்கு அனுமதி எடுப்பதற்கு மாமா தன் மனைவிக்கும் தெரியாமல் யாரிடமோ கடன் பட்டல்லவோ கட்டணம் செலுத்தியிருக்கிறார்.

எத்தனை சொந்த பந்தங்கள் இருந்தென்ன! அவர்கள் தாமாக உதவத் தயாராயில்லையே! அவர்களுக்கு உதவும் மனமில்லையா? உதவ வேண்டும் என்ற அறிதல் இல்லையா? தாமாகச் சென்று புரிவது தான் உதவி என்று பலருக்கும் தெரியவில்லையோ!

இந்தக் கடனை நினைப்பாளா? அத்துடன் அடுத்த மாதத்திலிருந்து வேறிடம் சென்று வாழ வேண்டியிருக்கிறதே, அதற்கான வாடகைப்பணம், உணவு, மற்றும் பிற தேவைகளுக்கான செலவுகள் எனப் பணம் தேவைப் படுகிறதே, அதை நினைப்பாளா?

இவற்றையெல்லாம் சிறிதளவும் நினைக்கவே அவகாசம் இல்லாமல் இந்த நிலையத்தின் ஒழுங்குகளைச் சீராக்க முற்பட்டாள்.

கணனியில் புரோகிராம் செய்பவளாக இருந்த போதும் தன்னாலே வளர்த்துக் கொண்ட 'இமேஜ் டிசைனிங்' (Image Designing) மற்றும் 'பேஜ் மேக்கிங்' (Page Making) போன்ற திறமைகளெல்லாம் வித்யாவுக்கு இங்கு கை கொடுத்தன.

விளம்பரத்துக்கென பத்திரிகைகளுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அங்குள்ள தகவல்களை கணனியில் பதிவு செய்து சேகரிக்கவும், அங்கு வரும் மாணவர்களுக்கு உதவி புரியவும் என இவள் பொழுது அனல் பட்ட மெழுகாய்க் கரைந்தது.

இங்கு தான் படிக்கவென இன்னுமோர் இலங்கைப் பெண் மீனா சேர்ந்தாள். பல மொழி, இனத்தவர் இணைந்தாலும் தமிழ் பேசுவோர் பாடசாலையிலோ வேலைத்தலத்திலோ ஒன்றாக

இணைந்தால் அவர்கள் மீது ஒருவித தனியான அக்கறை ஏற்படுவது இயற்கையே!

அந்தப் பெண்ணோ இலங்கை இந்திய மலேசியத் தமிழில் பட படவென்று கதைத்தாள். இவளின் நிலை விசித்திரமானது. தன் குடும்பத்தாருடன் பல வருடங்களின் பின்இணைந்துள்ளாள். மீனாவுக்கு பத்து வயதாக இருக்கும் போது 90இல் போர்ச்சூழலில் தாயார் இறந்து போய் விட்டார்.

94 இடப் பெயர்வின் போது நிலைகுலைந்த குடும்ப அமைப்பால் இவர்களது பொருளாதாரம் சரிந்து விட எப்படியாவது வாழ்ந்தாக வேண்டுமே என்ற சூழலில் இரண்டு குழந்தைகளைத் தகப்பன் வாடகை வீட்டாருடன் இந்தியாவில் விட்டுவிட்டு மூத்த மகனுடன் சட்டத்துக்கு எதிரான விதமாக லண்டன் வந்து 'அகதி' என்ற சட்டையை அணிந்து கொண்டார்.

பெற்றோருடன் வளரவேண்டிய வயதில், தங்கியிருந்த வாடகை வீட்டாரின் உதவியில் வளர்ந்து, வெளிநாடு புறப்படவென மலேசியா போய் சீர்திருத்தப்பட வேண்டிய வயதில், நினைத்ததைக் கதைத்தும் தான் சொல்வதைச் சரியென்றும் நினைக்கும் மனப்பாங்குடன் வளர்ந்துவிட்ட பெண் மீனா!

காலங்கள் தான் கடுகதி வேகத்தில் பறக்கிறதே, பத்து இப்போது பதினெட்டாகியதால் தந்தையின் பராமரிப்பில் வாழும் பிள்ளையாகப் பதியமுடியாத சூழல் மீனாவினது !

இந்தப் பெண்பிள்ளை இந்தப் பதினெட்டு வயதுக்குள் எத்தனை புது அனுபவங்களைப் பெற்றுவிட்டாள்! இவள் மட்டுமா இப்படி எத்தனை பிள்ளைகள்!!.

வித்யாவுக்கு மீனாவின் கதையைக் கேட்கும் போது ஆச்சரியம், அத்துடன் பரிதாபம் கலந்து வந்தது. இப்படியெல்லாம் எம் தமிழர் சீரழிகிறார்களே! எனச் சிந்தித்துக் கொண்டாள்.

அத்தருணம், ஓர் கறுப்பினப் பையனை அணைத்தபடி ஓர் வெள்ளைக்காரி உள்ளே புகுந்தாள். சிகெரெட் மணம் முகத்திலடித்தது. புகுந்தவள் "ஹாய்!, வென் கான் ஐ என்றோல்(Hi! When can I enroll?)" என்றாள். விரும்பாவிட்டாலும் பளிச்சிடும் புன்னகையைப் பரவவிட்டு " ஹாய்! .................அட் எனிரைம்" (Hi!, At any time) என்று தோள்களை ஸ்டைலா க (Style – நாகரிகம்) உயர்த்திக் கைகளை விரித்துச் சொன்னாள் வித்யா. "ஓகே.. வீ வில் ஜொய்ன் டு மோரோ (Ok! We' ll join tomorrow )" அவர்கள் எப்போது, புதிதாக ஆரம்பித்த வகுப்பில் சேரமுடியும் என்று கூறி அவர்கள் போய்விட, தொலைபேசி கிணுகிணுத்தது.

வித்யாவின் மாமா தான், அவர் வேலைத்தளத்தில் கிடைத்த இடைவேளை (Break) இன் போது தன் மருமகள் சுகம் விசாரிப்பது வழமையாகி இருக்கிறதே!

தன் தொலைபேசியை அழுத்தியபடி அங்குள்ள கழிவறைக்குள் புகுந்தாள் வித்யா.

# துவளும் மனது

பிற்பகல் இரண்டு மணிதான் ஆகிவிட்டபோதும் தன் கைகளையும் கால்களையும் முற்றுமாக "டூவே" (duvet –ஒரு வகைப் போர்வை) கொண்டு போர்த்திப் படுத்திருக்கிறாள் வித்யா!

அவளுக்கு வாழ்வே பூதாகரமாகத் தெரிகிறது. இதென்ன கொடுமை! நானுண்டு, என் வேலையுண்டு, அம்மா சமைத்துத் தரும் உணவுண்டு என்று இருந்த எனக்கு ..... நினைக்க நினைக்க அழுகையாக வந்தது அவளுக்கு.

ஒரு விதத்தில் மாமாவின் மீது எரிச்சல் கூட வந்தது. வித்யாவுக்கு! (ஏதாவது நல்வரன் இங்காவது அமையாதா என அவரின் ஏக்கம் புரியுமா இவளுக்கு?). இந்தக் குளிரில் ........எத்தனை இடமென்று தான் வேலைக்கு அலைவது ?

எங்கு போனாலும் முன் அனுபவம் கேட்கிறார்கள். அப்படியான வேலைகளுக்கு வித்யாவின் படிப்பும் வேலை பார்த்த அனுபவமும் கைகொடுக்காதே!

வித்யாவின் துறையில் வேலை எடுப்பதென்றால் முழுநேர வேலை செய்யும் அனுமதி கேட்கிறார்கள். 'ஏமாற்றம்' தந்த சோர்வில் எதையும் உண்ணப்பிடிக்காமல் படுக்கையில் சாய்ந்துவிட்டாள்.

அம்மாவுடன் வாழ்ந்த காலங்களில் கர்வமாக வலம் வந்து, "வித்யா சாப்பிட்டு படு! குமர்ப்பிள்ளைக்கு இது கூடாது!" என சாப்பிட வற்புறுத்தும் போது அதன் அருமை தெரிந்திருக்கவில்லை. இப்போது பசி பிடுங்கித் தின்றாலும் ........ மனம் உற்சாகக் காற்றிழந்த பலூனாகச் சுருங்கி இவளைக் கிடத்தி விட்டிருக்கிறது.

பக்கத்து அறையில் வசிக்கும் தம்பதிக்குள் ஏதோவோர் பெரிய கைகலப்புப் போலும். அவனும் அவளும் எப்போதும் வாய்ச்சண்டையில் ஈடுபடுவது இவளுக்குத் தெரியும். ஆனால் அது இன்று பூதாகரமாகி விட்டதே!

அவர்கள் இருவருமே துருக்கி நாட்டைச் சேர்ந்தவர்கள், இரண்டொரு தடவை பொதுவான சமையல் அறையில், 'மொரியா' என்ற அந்தப் பெண்ணுடன் வித்யா பேசியதில் இதைத் தெரிந்திருக்கிறாள். அவர்கள் மணமாகாமலே சேர்ந்து வாழ்பவர்கள்.

இப்போது, எங்கள் இனத்தவரும் கைக்கொள்ளும் நாகரீகம் தான் இதுவாச்சே! ஐரோப்பியரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அரிய பண்புகள் எத்தனையோ இருக்கும் போது இதை மட்டும் நம்மினம் கைக்கொள்ள வேண்டுமா?

இன்று அலெக்ஸை மொரியா அடித்துத் துரத்துவதை அவளின் குரலின் ஓங்குதலில் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்களது மொழி எதுவுமே புரிந்துகொள்ள முடியாதவளாய் சற்றுக் கலவரத்துடன் காணப்பட்டவள், கண்ணயர்ந்து போகிறாள்.

இருந்தாற் போல் யாரோ கதவைத் தட்டும் சத்தம், வித்யாவை விழிக்கச் செய்கிறது. திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறாள். என்னவென்று விசாரிக்கும் முன்பாக அவளின் கைகளில் அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு புன்னகைக்கின்றாள், அடுத்த அறையில் வசிக்கும் மொரீஷியஸ் (Mauritius) நாட்டுப் பெண் சாந்தி. ஆசியப் பின்னணி பெயரிலும் தோற்றத்திலும் இவர்களிடம் தெரியும்.

அவள் போய் விட, அவசரமாகப் பிரித்துப் பார்த்தால் வித்யா எதற்காகக் காத்து இருந்தாளோ அந்த என் . ஐ நம்பர் வந்திருக்கிறது. இன்று இவள் இங்கிலாந்து வந்து சரியாக இரண்டு மாதங்கள். இருக்கும் ஒன்றரை வருட விசாவில் (visa) இரண்டு மாதங்கள் கழிந்துவிட்டனவே!

தலை சுற்றுவது போன்று உணர்கிறாள். பசி தந்த விளைவு அது. ஏதாவது சாப்பிட இருக்கிறதா என்று பார்க்கிறாள். பச்சை அப்பிள் ஒன்றைப் படபட்வென்று கடித்துத் தின்கிறாள்.

சோறு வேகுவதற்கு முன்பாக தன் முட்டைப் பதார்த்தத்தினை சுடு எண்ணெய்த் தாச்சியினுள் ஊற்றி அதன் வேகுதலை உற்று நோக்குகிறாள். அதே நேரம் தனது கோப்பையைக் கழுவித்தான் பருகுவதற்கு அப்பிள் (apple) பழரசத்தை கிளாசினுள்ளும் ஊற்றி ஆயத்தம் செய்கிறாள்.

இந்த பசியில், உணவுக்கு உப்பு இருக்கிறதா, உவப்பாக இருக்கிறதா என்று சிந்திக்கத் தெரியவில்லை வித்யாவுக்கு! எத்தனை சுவையோடு அம்மா சமைத்தாலும், சிறுபகுதியே உண்பவளுக்கு இன்று கிடைப்பதே தேவாமிர்தமாக இருக்கிறது.

தொலைபேசியில் ஒருவன் தேவையற்று அரற்றுகின்றான். பேசப் பிடிக்காவிடிலும் வேலைதேடித் தருவதாக அவன் சொல்லி இருப்பதால் .................. சகித்து "யா(yeah) ......... யா(yeah) .........". போட்டுக் கேட்க வேண்டியிருக்கிறது! அவளுக்குத் தன் மீது ஆச்சரியம் கவ்வுகிறது. (இதுதான் சகிப்புத் தன்மையோ)

திடீரென ஏதோ ஞாபகத்துக்கு வந்தவளாய் எழுந்து விரைவாய் உடைகளை மாட்டத் தொடங்கினாள். மொபைல் போனை (mobile phone) ஸ்பீக்கரில் (speaker) மறுமுனையில் பேசுபவன் குரல் வெளியில்க் கேட்கும் விதமாக விடப் பட்டிருந்தது. இங்கு வெளியில் போவதற்குள் எத்தனையோ அணிய வேண்டியிருக்கிறதே! தரமான உள் தேமல் (thermal), அதற்கு மேல் ஜம்பர் (jumper) எனப்படும் குளிர்தாங்கும் உடை , சொக்ஸ், கிளவுஸ் (socks, gloves ) என்றெல்லாம்! ............... 'சீ............என்ன ...........வாழ்க்கை இது!!'

ஒன்றாகப்படிக்கும் ஜேம்ஸ் எனும் நைஜீரியப் பையன் கூறியதற்கிணங்க ஐரோப்பியப் பாணியிலான உணவுக்கடையான KFCயின் விற்பனை முகாமையாளரான சேல்ஸ் மனேஜரைப் (Sales Manager) பார்ப்பதற்காகத்தான் அவசரமாகப் புறப்பட்டாள்.

வித்யாவின் நினைப்புப்போல் எதுவுமே இல்லை, இங்கு ஏதாவது வேலை கிடைத்தால்ப்போதும் என்ற மனப்பக்குவம் வரவில்லைத் தான் எனினும் எதுவித தெரிவுமில்லையே !

அவள் அங்கு போகவும் அந்த வேலை யாருக்கோ கொடுக்கப்பட்டுவிட்டது என்ற கசப்பான செய்தி காத்திருந்தது. இங்கு வருவதற்கென்று செலவான இரண்டரைப் பவுண்ஸ் (பிரித்தானியப் பணம் pounds) பணமும் கையிலிருந்திருந்தால் அவளுக்கு மதிய உணவுக்கு உதவியிருக்கும்.

ஆம்! பயணச்செலவும் வாடகைச் செலவும் தான் லண்டனில் பெரிய அளவிலானது.

மீண்டும் தன்னறைக்குத் திரும்பி என்ன ஆகப்போகிறது என்ற எண்ணம் வர வெம்பிளியிலுள்ள 'பாரம் பார்க்' (Bharam Park) நூல்நிலையத்திற்குப் போகலாம் என்று 92 ஆம் இலக்க பஸ்ஸில் ஏறினாள்.

அங்கு எதேச்சையாகத் தன் பார்வையை அங்குள்ள அறிவுப்பலகையில் இடப்பட்டுள்ள அறிவித்தல்கள் மேல் பதியவிட்டாள். அங்கே ஓர் "வயோதியரைப் பார்வையிட ஆள்தேவை" என்ற ஆங்கிலத்தில் போடப்பட்டிருந்த விளம்பரம் அவளுக்கு மகிழ்வைத் தந்தது.

# அலுக்கும் மனது

அப்பாடா! இந்த நாடும் சட்டதிட்டங்களும்! ஒரு வயோதியப் பெண்ணைப் பராமரித்தலுக்கு, அதுவும் கிழமைக்கு பதினாறு மணி நேரம் செய்யும் வேலைக்குக் கூட எத்தனை பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டியிருக்கிறதே!

பாஸ்போர்ட், என் ஐ நம்பர், மற்றவர்கள் சிபாரிசுக்கடிதம், விலாசம் என்று எத்தனை ஒப்படைக்க வேண்டியிருக்கிறதே. மாமா இங்கு வாழ்பவர் ஆதலால் சிபாரிசு அவளுக்குக் கிடைத்தது. இல்லையெனில் இந்த வேலையும் கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

வித்யாவுக்கு கிழமையில் 16 மணிநேர வேலையாம். அந்த வீட்டில் கணவன் மனைவி மூன்று பிள்ளைகள் ஓர் வயோதியப் பெண். அவருக்குப் பக்கவாதம் (stroke) வந்து ஒரு பக்கம் இழுத்துவிட்டது. அவரின் பராமரிப்புக்கு நேரத்துக்கு நேரம் ஒருவர் வந்து அவரின் தேவைகளைக் கவனிக்க உதவியாளர் நியமிக்க அரசாங்கம் பணவுதவி கொடுக்கும்.

கிழமை நாட்களில் காலை ஒருமணிநேரம், மாலை ஒரு மணி நேரம் என பத்து மணித்தியாலமும் வார இறுதியில் நாளுக்கு மூன்று மணி நேரமும் வேலை செய்தால், கிழமைக்கு பதினாறு மணி நேரம் வேலையாகிவிடும் .

வேலை முடிந்து அடித்துப் பிடித்து 83-ஆம் நம்பர் பஸ்ஸில் ஒரு மணிநேரம் பயணித்து பல்கலைக்கழகம் போகும் அவள் வாழ்வுச் சுழற்சி!.

இந்த சூழலில் அவள் சமையல் சாப்பாடு , அறையைத் துப்புரவு செய்தல் , படித்தல் எனப் பிற பிரச்சனைகள்! என்னவோ ஏதோ அவளுக்கு இந்த வேலை கிடைத்ததே போதும் என்றிருந்தது.

சிந்தனையில் சென்றவள் அருகில் ஒரு கார் நிறுத்தப் பட்டதும் வெலவெலத்துப் போனாள். காரணம் இந்தச் சிவப்புக் கார் அடிக்கடி இவளைப் பின் தொடர்கிறது.

வித்யா பெரிய அழகியில்லைத்தான் ! என்றபோதும் அவளில் ஒருவித கவர்ச்சி இருந்தது. தோள் வரை அழகாகக் கத்தரிக்கப்பட்ட முடி, மெல்லிய இதழ் , அதன் மேல் அதே நிறத்தில் சாயம் ...... கண்ணிமையை மெல்லிய கோடாகச் செதுக்கியிருந்தாள்.

காரை நிறுத்தியவன் சுரேஷ், வித்யாவின் உற்ற நண்பி றஜிதாவின் அக்கா நர்மதாவின் கணவர். சுரேஷினுடைய பொறுப்பற்ற தன்மையால் அடிக்கடி நர்மதாவுக்கும் சுரேஷிற்கும் இடையில் பூகம்பமே வெடிக்கும் .

வித்யாவோ நர்மதா வீட்டுக்கு அடிக்கடி போய் வருபவள். அதனால்த் தான் வித்யாவைச் சமாதானம் பேசும்படி அடிக்கடி தொல்லை பண்ணுகிறான் .

கல்யாணம் என்ற பெயரால் நர்மதாவை யாழ்ப்பாணத்தில் இருந்து வரவழைத்து இரண்டு பிள்ளைகளுக்குத் தாய் ஆக்கியவன் , (g)கம்பிளிங் (gambling) என்ற கெட்ட பழக்கத்தால் கண்ணீரையும் சோறையும் உணவாகக் கொடுக்கிறான்.

இருக்கும் பணத்தைச் சூதாடி அழிக்கும் இவன் குடித்துவிட்டு வேறு நர்மதாவை அடிப்பதால், போலீசார் சுரேஷை நர்மதா வீட்டிற்குள் புகக்கூடாது என்று கூறியுள்ளனர் .

இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் கணவன் மனைவியையோ , மனைவி கணவனையோ தாக்க அனுமதி இல்லை . ஏன் பெற்றோர் பிள்ளைகளை அடிப்பதற்கே உரிமை இல்லை? அயலவர்களே போலீசாருக்குப் புகார் கொ டுத்து விடுவார்கள்.

இப்படித் தான் ஒரு நாள் வைத்தியசாலைக்கு சுகவீனமுற்ற தன் குழந்தையை நர்மதா அழைத்துச் செல்ல, சுரேஷ் குடிபோதையுடன் அங்கு சென்ற நர்மதாவை ஆங்கிலத்தில் இழிவாகப் பேசியிருக்கிறான் . நர்மதாவின் மூத்த பதினொரு வயது மகன் ஹரிஷ் அழத் தொடங்கிவிட்டான் .

அங்கிருந்த காவலாளி போலீசாருக்குத் தெரிவிக்க உடனே வந்து விட்டது போலீஸ் கார். சுரேஷைக் கைது செய்ய முற்பட அவனது இரண்டாவது பிள்ளை ஹரினா அழத் தொடங்கி விட்டாள். தகப்பனின் மீதுள்ள பாசம் சுகவீனமுற்ற மகளைப் பாதிக்கத் தாங்கமாட்டாத நர்மதா ஏதோவிதமாகச் சமாதானம் கூறி அங்கிருந்து போலீசாரைப் போகச் செய்து விட்டாள் .

இந்தச் குடும்பப் பூசலைத் தீர்த்து வைக்கும் படி தான் சுரேஷ் வித்யாவிற்குத் தொல்லை கொடுக்கிறான். வித்யாவுக்கு மிகச் சங்கடமாக இருந்தது . பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள் ! ஆம், இங்கு வெம்பிளியில் பல தமிழர்கள் வாழ்வதால், சமூதாயத்தின் கண்ணுக்கும் கணக்குக் கொடுக்க வேண்டியவளாக அவள் இருக்கிறாள் .

'போங்கோ! நான் நர்மதாக்காவோடை கதைக்கிறன் ' என்று அவசரமாகச் சொன்னவள் வீதியில் இறங்கி மறுபக்கம் போக விரைந்தாள் . சிவப்புக் காருக்குப் பின்னே வந்த காரை அவள் கவனிக்கவில்லை. சுரேஷ் , "வித்யா!!!....."என்று உரத்துக் கத்தியதால் திடீரென அதே இடத்தில் தரித்து நின்றதால்த் தப்பித்துக் கொண்டாள்.

மிகவும் கலங்கிப் போன வித்யா அருகே இருந்த பஸ் நிலையத்தின் இருக்கையில் அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது! அம்மாவின் நினைவு அவளை வதைத்தது.

அந்நிய நாட்டில் எனக்கொன்று நடந்தால் யார் தான் கவனிப்பார்கள்? தன் மீதே கழிவிரக்கமே வந்தது அவளுக்கு! இன்று அம்மா! அம்மா இல்லாத காலத்தில் .......? இதற்குத் தான் அம்மா அடிக்கடி இந்த மாப்பிள்ளை, அந்த மாப்பிள்ளை என்று வரன் பார்த்து என்னைத் தொல்லைப்படுத்துகிறாரோ!.

மாப்பிள்ளை என்றதும் சுரேஷின் தம்பி சுஜித் மனதில் வந்து போனான். 'என்ன இது! இவன் நினைவு எனக்கு ஏன் இப்போ வந்திச்சு?' அவன் செய்கைகள் என்னைக் கவருதோ!' எனத் தன்னைக் கடிந்து கொண்டாள்.

# வினவும் மனது

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்திலோ, இடம் பெயர்ந்த வேளைகளிலோ, கொழும்பு வந்து படித்த, வேலை செய்த காலங்களிலோ... இப்படியான சந்தர்ப்பங்களை தன் புன்சிரிப்பால், விகடப்பேச்சால் தவிர்த்த வித்யாவுக்கு இன்று ஏன் இந்த மனம் இப்படிச் சலனித்தது?

அவளுக்கே புரியவில்லை! தனிமையால் ஏற்பட்ட விளைவோ! என்றாலும் சுஜித்தை ஏற்றுக்கொள்ளும் எண்ணம் அவளுக்கில்லை.

சுஜித் ஏறக்குறைய லண்டனிலேயே வளர்ந்தவன், நுனி நாக்கில், சாட்சாத் வெள்ளைக்காரன் போலவே ஆங்கிலம் கதைப்பவன்... அவனுக்கும் தனக்கும் ஒத்துப்போகுமா... என்ற கேள்வி அவளுக்குள் இருக்கவே செய்தது.

ஈஸ்ட்ஹாம் (Eastham) நோக்கிப் பயணிக்கும் புகைவண்டியுள் வித்யா அமர்ந்து இருக்கிறாள். எதேச்சையாகத் திரும்பியவள் அவளது வீட்டில் வசிக்கும் மொரீஸியஸ் (Mauritius) பெண்ணான 'சாந்தி' ஓர் வெள்ளை வாலிபனின் மடியில் அமர்ந்திருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டுப் போகிறாள்.

ச்சீ! என்ன இவள்! அன்றொரு ஆடவனுடன் அறையில் சிரித்துக் கும்மாளமிட்டாளே! இவன் யார்? என்று கேட்டபோது போய்பிரண்ட்(boy friend) என்றாளே! (லண்டனில் போய்பிரண்ட் என்று அறிமுகப்படுத்தினால் காதலன், கணவனாகப்போகிறவன், கணவன் போலவே உறவுள்ளவன் என்று தானே பொருள்) அப்படியாயின் இவன்?

நிச்சயமாக நண்பனல்ல. அவளது இடையைச் சுற்றிய அவனது கைகள் அதை உறுதிப்படுத்தின. இங்கு வந்ததும் இங்குள்ள வெள்ளைக்காரர்கள் போல் காலத்துக்குச் காலம் துணைகளை மாற்றிக் கொள்ளும் இவர்களை என்னவென்பது?

கல்லூரியில் படிக்கும் கறுப்பு இனத்தவரோ, வெள்ளை இனத்தவரோ தங்கள் அம்மா, அப்பா, சகோதரர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவருடன் குடும்பம் நடத்திய கதைகளைக் கூறக்கேட்டு வியப்புடன் ஒருவித அருவருப்பையும் உணர்ந்த வித்யாவுக்கு ஏனோ கோபம் வந்தது இப்போது.

தோற்றம் ஆசியப்பெண் என்பதை மட்டுமே மற்றவர்க்குத் தெரிவுபடுத்தும். இவள் இந்திய, இலங்கைப் பெண் என்று கூட எண்ணவைக்கும் இவள் இப்படி நடப்பது தனக்குக் கிடைத்த அவமானம் போல் உணர்ந்தாள்.

ரெயில்வே ஸ்டேஷனுக்கு (Railway Station) வெளியே வந்தவள் மழை தூறுவதைக் கூடச் சட்டை செய்யாது நர்மதா வீடு நோக்கி நடக்கலானாள். இங்கு தான் அடிக்கடி காலநிலை மாறுமே. பெரும் பாலானோர் அதைப் பெரிது படுத்தவும் மாட்டார்கள்.

வீட்டு முகப்பில் கடைக்குப் போய் வந்து தன் பிள்ளைகளின் உதவியுடன் சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தாள் நர்மதா.

"நர்மாதாக்கா, உங்களை நினைக்க எனக்குப் பெருமையா இருக்கு, இவ்வளவு பாரத்தையும் நீங்களே சுமக்கிறீங்கள்."

"என்ன செய்ய? வித்யா! சந்தர்ப்பங்கள் வரேக்கை வாழ்க்கையிலை துணிச்சலும் வந்திடுது,"

"இது சின்ன விஷயமில்லை. ஹார்ட்டிலை(heart) வருத்தமிருக்கிற நீங்கள், மனம் தளராம நீங்களாகவே துணிஞ்சு கார் ஓட்ட பழகித் தனியாக் குடும்ப பாரத்தை சுமக்கிறீங்க

"இந்த நாட்டிலை நாங்கள் இப்படி ஸ்ரோங்கா (storng) இல்லாட்டி பிள்ளைகளின்ரை வாழ்க்கையிலை கஷ்டம் தான்" கதவைத் திறந்தாள் நர்மதா.

“பெயரளவிலை அவைக்கென்ன.. வெளிநாட்டிலை இருக்கினம் எண்டு சொல்லுவினம். இப்ப தானே தெரியுது இங்கை நீங்கள் தனி மனுஷியாய்ப் படுறகஷ்டம்”

“அதை விடு வித்யா! நீ சாப்பிட்டியா? என்ன இந்த ஈவினிங்(evening) ரைம்(time) இஞ்சால்பக்கம்?” சமையலறைக்குள் புகுந்தவாறே.

“அதை ஏன் அக்கா கேக்குறீங்கள். உங்கடை அவர்........ தான் பிள்ளைகளோட......... வாழ வேணுமாம்.....”.

"வித்யா! நான் என்ன செய்ய? என்ர கடைசி இரவு நித்திரையிலை எழும்பி “அப்பா! அப்பா!" எண்டு அழுகிறாள். "குடிச்சுப் போட்டு இவர் சண்டை போடுறதா........... அயல் சனங்கள் போலிசுக்கு சென்னதாலை .... இவரை உள்ளுக்கு வரக்கூடாது என்று சோஷல் சேவிஸ் (Social service) சொல்லியிருக்குது. இவர் இங்கை வருகிறார் எண்டு அறிஞ்சா........ பிள்ளைகளை சோஷஸ் சேவிஸ் (Social service) எடுத்துக் கொண்டு போயிடும்” என்றாள் பெருமூச்சு விட்டபடி.

“ஐயோ அக்கா..... என்ன சொல்றீங்கள்? ......உங்கடை பிள்ளைகளிலை உங்களுக்கு உரிமை இருக்காதா? இது பெரிய கொடுமை!"

"பின்னை என்ன? ......... எங்கடை நாடுகளப் போல வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டினம்................. இந்த நாட்டிலை பிள்ளைகளின்ர பாதுகாப்பையும் மன நலத்தையும் மதிக்குது இந்த நாட்டரசு". என்றாள் நர்மதா.

அழைப்பு மணி ஓசைகேட்டது, "பிள்ளைகள் யாரெண்டொருக்காப் பாருங்கோ"

“அம்மா ! சித்தப்பா வாறார்!" பிள்ளைகளின் குரலில் மகிழ்வு துள்ளியது.

“வாங்க! சுஜித்”......என்றாள் நர்மதா.

புன்னகைத்த படியே "ஹலோ' என்றான் வித்யாவைப் பார்த்து. வித்யாவும் 'ஹலோ! ஹவ் ஆர் யூ' (Hello! How are you?) என்றாள்

"கான் ஐ ஹாவ் யுவர் போன் நம்பர் பிளீஸ்?" (Can I have your phone number please?) என்றதும், மறுக்க முடியாதவளாய் தனது தொலைபேசி இலக்கத்தை சுஜித்துக்குக் கொடுக்க வேண்டியவளானாள். மறுத்தால் நர்மதா தப்பாக நினைக்ககூடுமே என்பது அவள் தயக்கம்!

வித்யாவின் கைப்பேசி ஒலித்தது. யாரென்று அவள் புருவங்கள் உயர்ந்தன. சுஜித் 'தட்ஸ் மி! (That's me!)' என்று சிரித்தான். அவள் கொடுத்த இலக்கத்தை அவன் சரியென தன் தொலைபேசி மூலம் உறுதி செய்தாலும் 'இட்ஸ் மை நம்பர் (Its my number)' இது தனது இலக்கம் என்று வழிந்தான்.

அய்யோ! நர்மி அக்கா! நேரம் போயிட்டுது! நான் போக வேண்டும்!

'நல்ல கதைதான்' நீ இருந்து சாப்பிட்டுப்போ! சுஜித், நீங்கள் இவளுக்கு லிப்டு (lift) கொடுக்கறீங்களா என்றாள் நர்மதா.

!நான் ஹரோ (Harrow) போறன்! வித்யாவை வெம்பிளி (Wembley) யிலை இறக்கி விடுறன்! என்றான் சுஜித்.

# சிந்திக்கும் மனது

'ஏன் எனக்கு மயக்கம், ஏன் எனக்குத் தயக்கம்!' என்று பாடல் மீண்டும் மீண்டும் பாட, வித்யாவுக்கு உண்மையில் ஒரு சங்கடம் ஏற்பட்டது போன்ற உணர்வு. சுஜித் வேண்டுமென்றே அவளைச் சங்கடப் படுத்தவே மீண்டும் மீண்டும் பாட்டை ஓட விட்டது அவளுக்குத் தெரியாது.

தன் வேலைக்குப் போகும் நேரம் ஆரம்பித்து விட்டதை உணர்ந்தவள் "எக்ஸ்கியூஸ் மி (Excuse me!) நானிங்கை இறங்க வேண்டும் என்று கூறி அங்கேயே இறங்கிக் கொண்டு தான் வேலை செய்யும் வீடு நோக்கி நடந்தாள்.

நடந்தவளுக்குப் பகீரென்றது. அந்த வீட்டின் முன்னே அம்புலன்ஸ் (ambulance) வண்டி பலவகை மின்விளக்குகள் மின்ன நின்று கொண்டிருந்தது.

விரைந்து சென்று விசாரித்தாள். திடீரென ஏற்பட்ட உயர் குருதியக்கம் (high blood pressure) காரணமாக அவரின் இதயத்துடிப்பு வேகமாகி மூச்செடுக்க வேறு சிரமப்படுகிறார். இதைக் கண்ணுற்ற மகன் அவசரசிகிச்சைக்கு அனுப்புகிறாராம்.

வண்டி அவ்விடத்தை விட்டு நகர, அவளும் இருக்கும் வேலையும் தற்காலிகமாகப் பறிபோனவளாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் நிரந்தரமாக அவ்வேலை தன்னை விட்டுப் போய்விடும் என்பதை அறியாதவளாக.

வைத்தியசாலைக்குப் போகும் நோயாளி உயிருடன் திரும்பாவிடில் அவளின் வேலை அவளுடன் தங்காது தானே.

இரவு பத்துமணியான போதும் தனியாக வீதியில் நடந்துவருகிறாள் வித்யா. இலண்டனில் ஆபத்து இல்லை என்று சொல்லமுடியாது தான். ஆனால் இரவு 12 மணிக்கும் பெண்கள் வேலையிலிருந்து வீடு போவது சாதாரண செயற்பாடு. இலங்கை, இந்திய நாடுகளில் ??? அதுவும் ஈழத்து மக்களுக்கு????

தொலைபேசி ஒலித்தது. பெற்றொல் ஸ்ரேஷனில் (petrol station) வேலைபார்க்கும் அன்ரனி என்பதை அறிந்து "ஹலோ" என்றாள்.

"ஹாய் வித்யா! எப்படியிருக்கிறீங்கள்?"

"ஒகே யா இருக்கிறன்.... ஈஸ்ட்ஹாம் (Eastham) போய் வந்து களைச்சுப்போனன்........ நீங்கள் எப்படி? அசைன்மென்ட் (assignment - பாடவேலை) செய்திட்டீங்களோ?"

"எங்க நேரம் கிடக்குது? யுனி (uni) யாலை பாட்ரைம் வேர்க் (part time work) குக்கும் போட்டு வந்து ..... ஒன்பது மணிக்கு இங்க வந்திருக்கிறன் இஞ்சை வந்தால் இந்த மனேஜர் (Manager) எரிஞ்சு விழுறான்.......... ஒரு மாதிரி அவரைக் கழட்டிப் போட்டு உமக்கு போன் (phone) அடிக்கிறன்".

"அப்படியா? ஏன்,...... நீங்கள் வேலை செய்யிற இடத்திலை கூடிய நேரம் வேலை எடுக்கேலாதே?"

"வேலை எடுக்கிறதெண்டா சரியான கஷ்டம். இவர் என்ரை சித்தப்பாவோட பிரண்ட் (friend). அதனால தான் நம்பர் (number) இல்லாமல் வேலை தந்திருக்கிறார்."

"ஏன்? உங்களிட்டை என்ஐ நம்பர் (N I number) இல்லையா?"

"இருக்கு. அந்த நம்பரிலை 20 அவர்ஸ் (hours) தானே வேலை செய்யலாம் பாட் ரைம் (Part time) வேலை...... அதிலதானே....... செய்யுறன்.".

"ஓகே! ஓகே விளங்குது....... இவர் கையிலை காசு தாறார்....... எண்டு சொல்லுறியள்.... அவைக்கும் பிரச்சனை வராதோ?"

"வேறை யாரோட...... பெயர்ல........ சம்பளம் போட்டுக் காட்டுவாங்க என்று நினைக்கிறன்".

"இதனால அவைக்கு என்ன லாபம்?"

"என்ன வித்யா சின்னப்பிள்ளை போல கேக்கிறீங்கள்" என்று கடகடவென்று சிரித்தான். தொடர்ந்தான்... "அரைவாசிச் சம்பளத்தைத் தந்து தான் என்னை வேலைக்கு வைச்சிருக்கினம். எனக்காவது பரவாயில்லை சிலபேருக்கு சரியான குறைவான சம்பளம் கொடுக்கிறாங்களாம்."

"என்ன அன்ரனி? இப்படியெல்லாம்......... இங்க யூகே யில நடக்குமா நீங்க இப்படிக் கஷ்டப்பட...... வேண்டுமா என்று யோசிக்கிறன்."

"என்ன செய்யுறது வித்யா?... நான் கொலிஜுக்கு (college) காசு கட்டோணும் ஊரிலை அம்மா, அப்பா, ஏலாத தங்கச்சி எல்லோர்க்கும் காசு தேவையே..!............. .கஸ்ரமர்ஸ் (customers) வருகினம் நான் பிறகு கதைக்கிறன்" வாடிக்கையாளர்கள் வரவும் தொலைபேசியைத் துண்டிக்கத் தயாரானான்.

வித்யா "ஓகே" எனக் கூறி போனைத் துண்டித்தாள்.

வீட்டுக்கருகில் வந்ததும் சமைப்பதற்கென்று எதுவும் இல்லையே' என நினைத்து கடைக்குள் புகுந்தாள்.

முன்பெல்லாம் எந்தப் பொருளையும் இலங்கை விலையுடன் ஒப்பிடும் தன் பழக்கத்தை நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"இண்டைக்கிரவைக்கு எப்படியாவது இந்த ப்ரஜெக்ட்டை (project) ஒரளவாவது முடிச்சிடோணும் இனிப் போய்ச் சமைக்கேலாது."

அடுத்த கடையில் விற்கும் புரியாணிப் பார்சலை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு விரைந்தாள்.

வெம்பிளியில் ஏறக்குறைய இந்திய இலங்கை உணவுகள் எல்லாமும் கிடைக்கும். ஐரோப்பிய உணவுகளுடன் ஒப்பிடும் போது மிக மலிவாகவே கிடைக்கும். என்றாலும் தாமாக சமைத்து உண்பது மிக இலாபமானது.

தன்னறைக் கதவைத் திறந்தவள் தொலைபேசியில் அழைப்பு வர வைபிரேட் (viberate - அதிர்வு) பண்ணியது. யாரென்று பார்த்தாள். அது சுஜித்தினுடைய அழைப்பு, என்பதால் அவள் அதைக் கண்டு கொள்ளவேயில்லை.

அவளது பராமரிப்பில் இருந்த மூதாட்டி வைத்திய சாலையிலிருந்து வரும் வரை அவள் வேலைக்குப் போகமாட்டாள், எனவே அந்த நேரத்தையும் பயன்படுத்தி தன் படிப்பில் கவனம் செலுத்த வேண்டுமெனக் கங்கணம் கட்டிக் கொண்டாள்.

வெளிநாட்டில் படிக்கிறார்கள். சமைக்கிறார்கள். வீட்டு வேலை அத்தனையும், தாமே செய்து இரண்டு வேலை கூடப் பார்க்கிறார்கள்.

இவர்களுடன் ஒப்பிடும் போது வித்யா நிறையவே செய்யலாம் என எண்ணிக்கொண்டாள்.

## சலனிக்கும் மனது

பல்கலைக்கழகத்தில், நூலகத்தில் இருக்கும் போது மொபைல் போன் வைபிரேட்டர் (mobile phone viberator) அதிர்ந்தது. பார்த்தாள். அந்த அழைப்பு நர்மதாவிடம் இருந்து என்பது புரிந்து நூலகத்தின் வெளியே வந்து அவசரமாக அழைத்தாள்.

"நர்மதாக்கா! என்ன விஷயம்!"

"ஐயோ! வித்யா... இவள் சின்னவள் ஸ்கூலில (school) விழுந்து கையை முறிச்சுட்டாள். அம்புலன்ஸ் (ambulance) வந்திட்டுது நான் ஆஸ்பத்திரிக்குப் போறன்"

"சரி அக்கா!.....அப்ப மூத்தவன்"

"சுஜித் பிக்கப் (pick up) பண்ணி வைச்சிருப்பாராம் நீ வந்தால் உன்னட்டை அவனை விட்டுட்டு நைட் டியூட்டிக்குப் (night duty) போறாராம். வரமுடியுமாடி?"

"என்ன கதையக்கா... இது? நான் யுனியாலை வாறன்... நீங்க பிள்ளையோட போங்கோ."

"சுஜித்துக்குச் சொல்றன் வித்யா! நான் போயிட்டு வாறன்".

"சரி அக்கா! படபடப்புடன் தன்புத்தகங்களை அடுக்கினாள். மடிக்கணனியையும் எடுத்துக் கொண்டாள். ஹெண்டன் (Hendon) புகையிரத நிலையம் நோக்கி நடந்தாள்.

வித்யா நர்மதா வீடு செல்வதற்கு முன்பாகவே நர்மதாவின் மூத்த மகன் உறங்கிவிட்டான்.

சுஜித் "வாரும் வித்யா! நைஸ் யூ மீட்யூ (Nice to meet you)"

"பிள்ளை எங்கை?" வித்யா கேட்டாள்

"அவன் படுத்திட்டான்........... கம் அன்ட்... ஸிட் ஹியர் (Come and sit here)" என்று சோ(f) பாவைக் காட்டினான்.

"சொறி (Sorry) எனக்குத் தலையிடிக்குது நான் கொஞ்சம் றெஸ்ட் (rest) எடுக்கப் போறன்.

"யூv (g)கொட் ஹெட் ஏக்? (You've got headache?)" என்றவாறே சுஜித் எழும்பி சமையலறைக்குள் புகுந்தான்.

வித்யா அங்கிருந்த தொலைக்காட்சியைத் திருகினாள். சற்று சாவகசமாக உட்கார்ந்து தமிழ்த் தொலைக்காட்சியில் போகும் "நெஞ்சாங் கூட்டில் நீயே நிற்கிறாய் பாட்டில் தன் கவனத்தைக் செலுத்தினாள்.

உதட்டுக்குள் புன்னகையைப் பரவ விட்டபடி சுஜித் "யூ டேக் சுகர்? (You take sugar?)" என்ற படி சுடச்சுடத் தேநீர் கொணர்ந்து அவளருகில் வைத்தான்.

அவளுக்கு மனம் ஏனோ இனித்தது. "தாங்ஸ்! (thanks)" என்ற படி தானே ஒரு கரண்டியளவு சீனி போட்டுக் கலக்கினாள்.

"எக்ஸ்கியூஸ் மி (Excuse me) வித்யா.. நான் பிறகு போன் பண்ணுறன்........... பிளீஸ் டேக் கெயார் ஒ:.ப் யுவர் செல்:.ப் (Please take care of yourself) .......அண்ணி சமைச்சு வைச்சிருக்கிறா சாப்பிடும் என்ன!" என்றபடி தன் சாப்பாத்துகளை அணிந்தான்.

கோட்டினை அணிந்து விட்டு கார்ச்சாவியை எடுக்க அவளைக் கடந்து செல்ல அவளது காலும் அவனது காலும் உரசிக் கொண்டன. 'சொறி (sorry)' என்றான். வித்யா எதுவித பிரதிபலிப்புமே முகத்தில் காட்டவில்லை.

அவன் அவ்விடம் விட்டுச்சென்றது, அவளுக்கு ஏனோ மனதுக்குக் கஷ்டத்தைக் தந்தது. அவளது சிந்தனை சிதறும் விதமாக தொலைபேசி ஒலித்தது.

அவசரமாகப் போனை எடுத்தாள். மறுபக்கம் "என்னடா.. அடிச்சவுடனே போன் எடுக்கிறாய்.......... எவனாவது போன் (phone) பண்ண மாட்டானா என்று காத்திருந்தனியே?" என்று காரமாய் ஒலித்தது.

வித்யா எரிச்சல் மிகுந்தவளாக அதே நேரம் நிதானம் கடைப்பிடித்து "ஹலோ நான் வித்யா கதைக்கிறான் யார் நீங்க சுரேஷ் அண்ணாவா?" தெரியாதது போல் கேட்டாள்.

"ஸோ சாரி (So sorry) வித்யா! எங்க, அந்த நர்மதா இடியட்(idiot)?..........." என்றான் சுரேஷ் தொடர்ந்து "நான் அவள் எண்டு நினைச்சன்...."

வித்யா "நர்மதா அக்கா பாவம்! நான் உங்கடை ............ குடும்பப் பிரச்சனையிலை மூக்கு நுழைக்க விரும்பேல்லை.......... அவ இப்ப ஹாஸ்பிட்டலுக்கு (hospital) சின்னவளைக் கொண்டு போயிட்டா அவள் ஸ்கூல்லை (school) விழுந்து கையை முறிச்சுப் போட்டாள்!.

"என்ன? அது" ஆவேசமாகக் கத்தினான் சுரேஷ். நான் அவளுக்குச் செய்யுறன் வேலை. பிள்ளையிலை ஒரு கவனமும் இல்லை" என்று நர்மதாவைத் திட்டினான்.

"அப்படிச் சொல்லாதீங்கோ அண்ணை! ............. பிள்ளை ஸ்கூல்ல விழுந்ததுக்கு அவ என்ன செய்யுறது"

"இவள் இப்படித்தான்!!" என்று போனை அடித்து வைத்து விட்டான் சுரேஷ்.

வித்யாவுக்கு நர்மதாவை நினைக்கப் பாவமாக இருந்தது.

கல்யாணம் என்ற பெயரில் நர்மதாவுக்கு கிடைத்த 'ஆயுட்தண்டனை' இது என்ற நினைத்துக் கொண்டாள்

'சிட்டுக்குருவி போன்று திரிந்த ஐந்து பிள்ளைகளில் மூத்தமகளான நர்மதாக்கா, தான் படும் பாட்டை தன் வீட்டாருக்கும் கூடத் தெரியாமல் வாழ்கிறா, உண்மையில........... நர்மதாக்கா ஒரு தியாகிதான்' என்று நினைத்துக் கொண்டாள்.

அழைப்பு மணி கேட்டு எழுந்து பார்த்தால் கழுத்தையும் கையையும் சேர்த்த கட்டுடன் குழந்தையை ஓர் கையில் பிடித்தபடி நர்மதா நின்றிருந்தாள்.

"பிள்ளைக்கு எப்படியக்கா" என்றாள் வித்யா.

"சின்ன முறிவு தானாம்... மூண்டு கிழமைல கட்டவிழ்ப்பினமாம்".

"அக்கா....சுரேஷ் ......... அண்ணா ......................." என்று இழுத்தாள்.

"அதை விடு! வித்யா மொபைலிலை (mobile) .............. ஒரே வசை மழை" என்று விரக்தியாகச் சிரித்தாள் நர்மதா.

# படரும் மனது

மக்டொனால்ட்ஸில் (Mc Donalds) சுஜித்துக்காக காத்திருக்கிறாள் வித்யா. தான் வேலையால் இவ்வழி போவதாகவும்அவளுக்கு வேலை தேடுவதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதாகவும் சொல்லியிருக்கிறான் சுஜித்.

அவன் விரும்பினால் மின்னஞ்சலில் அதைப் பெற்றிருக்கலாமே... ஏதோ விண்ணப்பப் படிவமும் நிரப்ப வேண்டியுள்ளதாம்.

'தன்னைச் சந்திக்க அவன் வகுத்துள்ள ஒரு வழி தான் இது' என்பது அவளுக்குத் தெரிந்தாலும் அதுவும் ஒரு விதத்தில் வித்யாவுக்கும் பிடித்திருக்கிறது.

வித்யா பராமரித்து வந்த அந்த வயோதிபப் பெண் மருத்துவ சாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டாம் நாளே இறந்துவிட்டதால் வித்யாவுக்கு இருந்த வேலையும் பறிபோய்விட்டதே.

தான் வேலை செய்யும் ஓர் கம்பெனியில் வேலை எடுத்துத் தருவதாக சுஜித் கூறியதால் இங்கு காத்திருக்கிறாள். மற்றவர்கள் கருத்துக்குத் தான் ஆளாகாமல் இருப்பதற்காக ஒரு பவுண்டுக்கு (sterling pound) ஐஸ்கீரீம் (ice cream) வாங்கிவந்து கொஞ்சம் கொஞ்சமாக அருந்திக் காலத்தையும் விழுங்கும் செயலில் ஈடுபட்டுள்ளாள்.

"ஹாய்(Hai) !" என்று தோளில் தட்டினான் சுஜித். சற்றுத் திடுக்கிட்டவளாய் "ஹலோ!" என்றாள். தனது தொப்பியை மேசையின் மீது வைத்து விட்டு உணவுகள் விற்கப்படும் இடம் நோக்கி நடந்தான் சுஜித். ஐந்து நிமிடத்தில் இரண்டு சிக்கன் பேகர் (chicken burger), இரு ஆப்பிள் பை (apple pie) , ஒரு கோக்கோ கோலா (cocoa cola), ஒரு செவன் அப் (seven up) என மேசையில் கொணர்ந்து வைத்தான்.

அவள் பார்வையை உயர்த்துவதற்குள் "ஐ நோ யூ லைக் அப்பிள் பை (I know you like apple pie)" என்று, அவளுக்கு ஆப்பிள் பை பிடிக்கும் என்பது எப்படி அவனுக்குத் தெரியும் என்றான்.

அவளுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. "உங்களுக்கு என்னண்டு......................?"

"அது தான் சுஜித் ஸ்டைல்(style)..." என்று தோளை உயர்த்தினான்

"இது சரியில்லை சுஜித்" என்று இழுத்தாள்.

"எது? நான் போட்டிருக்கிறதா?" தெரியாதது போல் வினவினான்.

'நீங்கள்........... ஏன் எல்லாத்தையும் வாங்கினீங்கள் ..........அதைச் சொன்னனான் ..............." என்றாள்

"எனக்குப் பிடிச்ச ஆக்களுக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கச் கூடாதா?"

"வாட் யூ மீன்? (What you mean) சுஜித்?" என்றாள்.

"ஐ மீன் வி ஆர் ஃபிரண்ட்ஸ் (I mean we are friends) இதிலை என்ன பெரிய விஷயம் அது மட்டுமில்லை நீர் எங்கடை ஃபமிலி மெம்பர் (family member) மாதிரி.

"ஹலோ......." என்று இழுத்தாள் வித்யா இளக்காரமாக.

"அண்ணி எப்ப பார்த்தாலுமே .....உம்முடை புராணம் தான்.... அண்ணிக்கு உம்மிலை சரியான விருப்பம்".

"ஓ! நர்மி அக்காவை எனக்குச் சின்னப் பிள்ளையிலே இருந்தே தெரியும்".

"என்ன புதுக்கதை? நீர் அண்ணியைச் சின்னப் பிள்ளையிலே பார்த்திருக்கிறீரா?"

"ஹா ஹா ஹா" என்று சிரித்தாள். "டோண்ட் பிளே வித் மீ (Don't play with me) நான் சின்னப்பிள்ளையாய் இருக்கேக்கை அவ அக்காவோடை அடிக்கடி வருவா வீட்டுக்கு" பேசும் போது புரைக்கேறியது.

சுஜித், அவள் தலையில் இரண்டு தரம் மெதுவாகத் தட்டினான்.

அவளுக்குப் பேச்சே வரவில்லை. மௌனம் அங்கே தன் ஆக்கிரமிப்பை ஆரம்பித்தது.

சுஜித் சிரித்த படியே "இது தான் அந்த ஃபோம் (form)" என்று தன் கோட்டிலிருந்து ஒரு படிவத்தை அவளிடம் கொடுத்தான்.

"ஒரு சைன் (sign) வைச்சா போதும் சி.வி (CV) ஐயும் பார்த்து நானே நிரப்புறன்" என்றான் அவளும் அவ்வாறே செய்ய, அவன் அங்கிருந்து அகன்றான்.

பசியில் இருந்த வயிறு மட்டுமல்ல அவள் மனமும் நிரம்பியது போல் உணர்ந்தாள். இந்த இடத்தை விட்டு நகரவே மனம் ஒப்பவில்லை அந்தச் சூழல் தந்த இனிய அனுபவத்தை இரசித்தாள்.

எழுந்து நடந்தாள். அறைக்கதவைத் திறந்ததும் அப்படியே கட்டிலில் விழுந்தாள். அவளது அனுமதி இன்றியே நினைவுப் பறவை பின்னோக்கி அவளை அழைத்துக் கொண்டது மட்டுமல்ல அவளை அசைபோடவும் வைத்தது.

தனக்கெனத், தனக்குப் பிடித்த உணவை வாங்கித் தந்தது, பேசியது மட்டுமல்ல தனக்குப் புரையேறிய போது அக்கறையோடு தலையில் தட்டியது. எல்லாம் அவனது கரிசனையை அவளுக்குப் புலப்படுத்தியது. நினைவுகள் தந்த கிறக்கத்தில் தூங்கியே விட்டாள்.

# சிந்திக்கும் மனது

"பிள்ளை நீ சிவராசாவின்ர மோளோ?" வெம்பிளி (Wembley) சிவன் கோவிலில் அர்ச்சனைக்குச் சீட்டு வாங்கும் வரிசையில் நின்ற வித்யாவை அருகில் ஒரு குரல் ஒலித்தது.

திரும்பிப் பார்த்த வித்யா "ஓம்! சொல்லுங்கோ, நீங்க மதுமிதா அன்ரி (Aunty) யின்ரை அம்மா தானே?" என்றாள், அந்த வயதான மூதாட்டியைப் பார்த்து.

"அட! பெரிய்ய்யயய ...கெட்டிக்காரியாய் இருக்கிறீர்! என்னை உடனே கண்டு பிடிச்சிட்டீர்!"

"அது ஒண்டுமில்லை. நீங்களும் வெம்பிளியிலை (Wembley) தான் இருக்கிறீங்களோ?"

"இல்லை, நான் ஹறோ (Harrow) விலை இருக்கிறன். இண்டைக்கு மதுமிதாவுக்கு நைட் டியூட்டி (night duty), சின்னவன் வந்தாப் போலை கூட்டி வந்தான்!.

"அப்ப, உங்கட அவர் வரேல்லையோ?"

இல்லைப் பிள்ளை, இண்டைக்கு மருமகள் வேலைக்குப் போட்டா. ஸ்கூலு(school)க்குப் போன பேரப்பிள்ளைகளைக் கூட்டியந்து சாப்பாடெல்லாம் குடுக்க வேணும்."

"நீங்களும் அவரும் ஒண்டாய் ... இல்லையோ!!"

"இல்லையம்மா, இந்தக் கொடிய விதியை என்னெண்டு சொல்றது!! நானும் அவரும் பிள்ளைகளைக் கலியாணம் கட்டிக் கொடுக்கிற வரைக்கும் பிரிஞ்சு வாழேல்லை"

தொடர்ந்தார் அந்த மூதாட்டி.

"இப்பத்தான் ஒரே நாட்டிலிருந்தும் கிழமைக்கொருக்கா, அல்லது இரண்டு கிழமைக்கொருக்கா எண்டு சந்திக்கிறம்"

"அம்மா என்ன சொல்றீங்கள்? நீங்கள் மகள் வீட்டிலையும் உங்கடை அவர் மகன் வீட்டிலையும் சீவிக்கிறீங்களா?. ஏதாவது சட்டப் பிரச்சனையா?"

"அத விடு பிள்ளை!. நீ எங்கட வீட்டை வாம்மா இண்டைக்கு. நான் இப்ப அர்ச்சினை செய்துட்டு ஆயத்தமா இருக்கோணும். மகன் வேலைக்குப் போகமுதல் வந்து கூட்டிக் கொண்டு போய் விடுறதெண்டு சொன்னவன்"

"நான் வேறொரு நாள் வாறேனே! எனக்கு ஈவினிங் லெக் ஷர் (evening lecture) இருக்கு. நான் வேறொரு நாளைக்கு வாறேனே...."என்று இழுத்தாள்.

"என்னட்டை அடி வாங்கப் போறீர்!" செல்லமாகக் கடிந்தார் அந்த மூதாட்டி.

அடுத்த கணமே "நல்ல பிள்ளையல்லோ என்னோடை ஒருக்கா வாணை" என்றார்; செல்லமாக.

←-------------------------------→

கிங்ஸ்பெரி (Kingsbury)யில் அந்தப்பெரிய வீட்டைக் கண்டதும் வித்யாவிற்கு மிக ஆச்சரியமாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

லண்டனில் பொதுவாக எல்லா வீடுகளும் சின்ன அறைகளை ஒரு நீண்ட தரை இணைப்பது போலவும் வரவேற்பறையும் ஓர் சற்றுப் பெரிய அறையைப் போன்ற தோற்றத்துடனும் காட்சியளிக்கும்.

ஆனால் இந்த வீடோ மிகவும் வசதி நிறைந்த கூடத்தைக் கொண்ட பல அறைகளையுமுடைய வீடாக இருந்தது.

எம்மவர் இந்த விதமாக, நாடுகள் கடந்து வந்தபோதும் இப்படிச் சிறப்பாக வாழ்வது சிறப்புத் தானென பெருமிதமாக நினைத்துக் கொண்டாள். இங்கு எம்மவர் வீடுகள் வாங்குகிறார்கள். ஆனால் இந்தியாவில் முடியாதே!

அதிகம் படிக்காத போதும் கூடத், தொடர்ந்த உழைப்பால் இப்படி வசதியான வாழ்வு வாழ்தல் நல்லது தானே. இந்த நிலைக்கு வர இவர்கள் எவ்வளவு பாடு பட்டிருப்பார்கள்.. என நினைத்துக் கொண்டாள்.

இப்படியும் சிலர். ஆனால் சிலரோ கிடைத்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொள்ள மாட்டார்கள், வேறு சிலரோ லண்டன் வந்ததும் தமக்குப் புதிதாகச் சிறகு முளைத்து விட்டாற் போன்ற பாவனையில் நடந்து கொள்வதையும் எண்ணிக்கொண்டாள் ஒரு விநாடி.

வெளியில் போகும் போது தங்களுக்கு குளிர் பற்றிக் கொள்ளாத விதமாக மற்றவர்கள் போல் குளிருடை அணிவார்கள். ஆனால் வீட்டினுள்ளே காலே வைக்க முடியாத அளவிற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாய் அத்தனை பொருட்களும் சிதறிக் கிடக்க தொலைக்காட்சி நாடகத் தொடரில் தொலைந்து போயிருப்பார்கள்!

அறைகள் அறைகளாய் வாடகைக்கு வீடு தேடி... ஏறியிறங்கிய வித்யாவிற்கு இவையெல்லாம் அனுபவம் தந்த பாடம்.

ஆனால் இந்த வீட்டின் சொந்தக்காரர்கள் தாம் தேடி வைத்ததை அனுபவிக்காமல் தினந்தினம் ஓட்டமாகத் திரிவதும் அபத்தமாகப் பட்டது.

இந்த வீட்டுக்கு அதிபதியான ரமேஷ் ஒரு பெற்றோல் நிலையம் வைத்திருக்கிறார். இரண்டு ஓ.ஃப்லைசன்ஸ் (off licence) எனப்படும் கடைகளும் நடத்துகிறார். ஓ.ஃப்லைசன்ஸ் (off licence) கடையில் பலசரக்குச் சாமான்களும் மற்றும் குடிவகைகளும் பாடசாலை உபகரணங்களும் விற்கப்படுகின்றன. இத்துடன் இவரது மனைவியான மதுமிதாவும் பகுதி நேர வேலை செய்கிறாள்.

கணவன் ஒரு புறம் தன் தொழில், வியாபாரமெனக் கவனத்திலாழ மதுமிதாவும் தன் தொழில், தனது அலங்காரம் எனப் பகலிரவாய்ப் பாடு படவேண்டியது தான்.

பிள்ளைகளைப் பொறுத்தவரை சகல வசதிகளும் இருக்கின்றன. அதை வழிப்படுத்திக் கொடுக்க அவர்களது பெற்றோர்க்கே நேரமில்லை. பொறுப்பைப் பெற்றோர் இப்படி தட்டிக்கழித்தல் வேதனைக்குரியதே!

அத்தோடு ஓய்ந்த காலங்களில் கணவனின் அன்பை, அக்கறையை, தாளாமையை அனுபவிக்க முடியாத மனைவியரும், ஓய்வு பெற்றுத் தம் பழைய நினைவுகளைக் கட்டியவளுடன் ஒருங்கே மீட்க முடியாத கணவன்மார்களும் தள்ளாத வயதில் தமது பேரப்பிள்ளைகளை ஓடிப்பிடித்து கட்டுப் படுத்தாத அவர்கள் நிலையும்!!

இலங்கையில் நிம்மதியாக இந்த வயோதிபர் வாழக் கிடைத்து, மாறி மாறிப் பிள்ளைகள் போய்ப் பார்க்கும் நிலை வராதோ!! அல்லது இந்த அரசாங்கம் கொடுக்கும் தனி வீடுகளில் இத்தம்பதியர் சேர்ந்து வாழும் அல்லது பிள்ளைகள், எமக்காகத் தானே எம்பெற்றோர் அத்தனை சுகங்களையும் துறந்து வளர்த்தார்கள் என்று நினைத்து குறுகிய காலமாவது விரும்பியதை உண்டு, கதைத்து வாழ வழி வகுக்க வேண்டும் என நினைப்பார்களா? என்றெல்லாம் வழியெல்லாம் நினைத்த படி வந்தாள் வித்யா.

# துள்ளும் மனது

காலையில் எழுந்ததும் குளித்து தன்னுடைகளை மாற்றிக் கொண்டாள் வித்யா. அவள் மனதில் இனம் புரியாத துள்ளல். காரணம் அவள் காதல் வயப்பட்டு விட்டாள்.

இன்று சுஜித்துடன் உணவகம் ஒன்றுக்குப் போவதற்கு சம்மதம் தெரிவித்ததால் தான் இந்த ஆயத்தங்கள்.

இந்த அளவுக்கு சுஜித், இவ்வளவு விரைவில் அவள் மனதைக் கவர்வான் என எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு சுஜித்தின் மீது பிரியம் இருந்தாலும் அவனுக்குத் தன் விருப்பத்தை அவ்வளவு விரைவில் வெளிப்படுத்துவாள் என அவள் நினைக்கவேயில்லை.

அன்று செவ்வாய்க்கிழமை. 13 ஆம் திகதி. வேலையால் வந்த களைப்புப் போக கட்டிலில் சாய்ந்து இருந்து விட்டு ஏதாவது சாப்பிடலாம் என்று சமையலறைக்குப் புகுந்தவள் அங்கிருந்த 'கோழி' வடிவிலான சுவர்க்கடிகாரத்தினைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

கடிகாரமோ நள்ளிரவு பன்னிரண்டாவதற்கு ஐந்து நிமிடங்கள் இருப்பதைக் காட்டியது. 'ஐயையோ இவ்வளவு நேரமாச்சுது. உடுப்புக் கூட மாத்தேல்லை நான்' என்று சிந்திக்கும் வேளை இவள் வீட்டு அழைப்பு மணி ஒலித்தது.

மேலும் கிலி கொண்டவளாய் யன்னலினூடு வெளியே பார்த்தாள். அவள் கண்களையே நம்ப முடியவில்லை. சுஜித் தன்னை மறைக்குமளவுக்கு உயரமான அடர்ந்த ரோஜாப் பூக்கள் கொண்ட மலர்க்கொத்துடன் நின்றிருந்தான். அவள் கைத்தொலைபேசியும் ஒலித்தது.

அவசரமாய்க் கதவைத் திறந்தாள். "ஹாப்பி பேர்த் டே (Happy Birthday) வித்யா"கையை நீட்டினான் கை குலுக்க. அவளும் தன் கையை நீட்டத் திடீரென ஓர் ரோஜாச் செண்டை அவளிடம் நீட்டி "ஐ லவ் யூ (I love you) வித்தீ" என்றான்.

வித்யாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ரோஜாச் செண்டைப் பெற்றவள், அதேநேரம் வெளியில் கடும்குளிர் ஒருபுறம். மற்றும் தற்செயலாக யாரும் இவர்களைப் பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற சிந்தனையும் மேலிட "முதல்ல உள்ளுக்கை வாங்க சுஜித்" என்றாள்.

"தாங்க்ஸ் வித்தீ! நான் நினைச்சன் நீர் பெரிய பிரச்சனை எல்லாம் எடுப்பீர் எண்டு" என்ற படி மலர்க் கொத்தை அவளிடம் கொடுத்து விட்டு, தன் கோட்டைக் கழற்றினான்.

"தாங்க் யூ! (Thank you!) நான் இப்ப என்ன சொல்லிப் போட்டன் எண்டு இப்பிடிக் கதைக்கிறீங்கள்?"

"நான் நினைச்சன்! நீர் அண்ணிக்கு எல்லாம் சொல்லிப் பெரிய பிரச்சனை எடுப்பீர் எண்டு நினைச்சன்" என்றான் சுஜித்.

"ஹ ஹா ஹா, இப்பவும் நான் சொல்ல மாட்டேன் எண்டு எப்படி நீங்கள் நினைக்கேலும்." என்று தன் உணர்வுகளை மறைக்க முயன்றாள்.

"உம்மாலை அது முடியாது வித்தீ! பிகோஸ், ஐ நோ யூ லவ் மீ (because I know you love me)! நீர் என்னை விரும்புறீர், அது எனக்குத் தெரியும்," என்றான் அவள் கண்களை உற்றுப் பார்த்தவாறே!

"ப்ளீஸ் சுஜித்!, நான் கொஞ்சம் யோசிக்கோணும்." என்றாள் தன் கண்களை வேறு பக்கம் வலுக்கட்டாயமாக நோக்கிய படியே.

"நிச்சயமா!, டேக் யுவர் ஓண் டைம் (take your own time)! தாராளமா யோசிச்சு முடிவு எடும்" என்றவாறே கோட்டைக் கையில் எடுத்தவன் "நல்ல பதிலாய்ச் சொல்லுவீர் என நான் எதிர்பார்க்கிறன், உம்முடை போன் கோலு (phone call) க்காகக் காத்து இருப்பன்" என்ற படி கதவைத் திறந்து தன் காரை நோக்கி நடந்தான்.

செயலற்றவளாய்க் கதவருகில் அவன் மறையும் வரை பார்த்திருந்தவள் கதவை மூடியதும் கதவுடன் சாய்ந்து நின்று யோசித்தாள். இந்த காதல் நாடகத்திலிருந்து தன்னால் தப்ப முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

மீண்டும் போய்ப் படுக்கையில் விழுந்தாள். புரண்டு புரண்டு படுத்தாள். கண்களை மூடினால் சுஜித்தின் புன்னகையுடன் கூடிய வதனம் தான் அவளுக்குத் தெரிந்தது.

அதிகாலை வரை தூக்கம் வராமல் தவித்தவள் தன் உட்கிடக்கையை தொலைபேசிமூலம் குறுஞ்செய்தியாய் "எனக்கு உங்களைப் பிடித்திருக்கிறது" என்று தமிழ் உச்சரிப்பிலேயே ஆங்கிலத்தில் enakku unkalaip pidichchirukku என அனுப்பினாள். அதன் பிறகு தான் அவளால் தூங்க முடிந்தது.

இப்படித் தான் ஆரம்பமானது இவர்கள் காதல்.

உண்மையில் லண்டன் வந்த நாள் முதலாய் தன் வாழ்வின் மீதே ஒரு வெறுப்பு ஏற்பட்டது போன்ற உணர்வில் திளைத்த அவளுக்கு இப்போது ஒரு புத்துணர்ச்சி வந்திருக்கிறது.

"வாழ்க்கையே வசந்தமானதே! வாலிபனே உன்வரவாலே!
யாக்கையே பறக்குதே! யாவையும் இனிக்குதே!
பூக்களும் பொய்கையும் கேட்குதே எனைக் கேள்விகள்..
நாட்களும் கடக்குமோ விரைவிலே! நானுனைச் சேரவே!"

ஆம்! அவள் காதல் வயப்பட்டு விட்டதால் அவளுக்குக் கவிதை கூடக் கைவருகிறதே!

# அங்கலாய்க்கும் மனது

திடீரெனத் தங்குவதற்கு இடமின்றி இப்படி அவலத்திற் உள்ளாவாள் என்று வித்யா நினைக்கவேயில்லை.

ஏற்கனவே வீடு சொந்தமாக உள்ளவர்கள் தங்களுக்கு வாழ இடமில்லை என அரசாங்க உதவி நாடுவதும் அந்த வீட்டை வாடகைக்கு விட்டு ஆட்களை வைத்து பணம் சம்பாதிப்பதும் கூட இங்கிலாந்தில் நடப்பதொன்று.

அந்தக் குழறுபடியால் இன்று பாதிக்கப்பட்டவர்களில் ஒருத்தி வித்யா. ஒரே நாளில் அவள் எங்கு போவாள் தங்குவதற்கு?

நர்மி அக்கா வீட்டில் தங்குவதற்கும் போதிய இடவசதியில்லை. அதுபோக, எப்போதும் நர்மதாவின் கணவர் குடித்துவிட்டு வந்து கதவைத் தட்டக் கூடும் வித்யா தங்கியிருப்பதைச் சாக்காகக் கொண்டு கூட பிரச்சனையைக் கிளப்பக்கூடும்.

தன் பிரச்சனையை சுஜித்துக்குச் சொன்னாள். அதற்கு சுஜித், தனது நண்பன் ஒருவன் ஸ்பெயினுக்குப் (Spain) போய் இருப்பதாகவும் அந்த அறையில். அவள் தங்க முடியும் எனவும் அவளுக்குத் துணையாகத் தான் தங்குவதாகவும் சொல்லிச் சிரித்தான். அவளுக்கு அழுகை தான் வந்தது.

லண்டனுக்கு வெளியே பேர்மிங்காமில் (Birmingham) உள்ள உறவினர் வீட்டில் போய்த்தங்க ஒருவாறு இடம் கிடைத்தது. இரவிரவாக எத்தனையோ இடங்களில் ஏறியிறங்கி ஒருவாறு பேர்மிங்காமை (Birmingham) அடைந்தாள்.

அங்கும் நிம்மதி கிட்டவில்லை. வீட்டின் தலைவி நேர்ஸ் (nurse), இரவு வேலைக்குப் போய்விட ஏதோ சிலபல சாட்டுகளைச் சாக்காக வைத்துக் கொண்டு கதவைத்தட்டும் அவளது கணவன். பார்த்தால் 'பரம சாது' ஆனால் அவன் எண்ணமோ.......!!

'எப்படா விடியும்?' எனக் காத்திருந்தாள் விடிந்ததும் நர்மதாவுக்கு அழைத்து நடந்ததைச் சொன்னாள்.

நர்மதாவோ ஒரே சத்தம் போட்டுவிட்டாள். தனது நண்பி "ரோஷிணியிடம் வாடகைக்கு அறையுண்டே" எனத் திட்டித் தீர்த்தாள்.

ஒருவாறு காலைச் சாப்பட்டை முடித்துக் கொண்டு தெரிந்தும் தெரியாததுபோல் ஒன்றுமே நடவாது போன்று தங்கிய வீட்டாருக்கு நன்றி தெரிவித்து நீஸ்டனில் (Neasden) உள்ள நர்மதாவின் நண்பி ரோஷிணி வீட்டுக்குப் போனாள்.

ரோஷிணிக்கு இரண்டு பிள்ளைகள். கணவர் ஒரு தபாற்கந்தோரில் வேலைபார்க்கிறார். அவர்களது வாழ்க்கை முறை வித்யாவுக்கு மிகவும் பிடித்துக் கொண்டது.

கணவர் வேலைக்குப் போகும் வேளைகளில், கேக் (cake) செய்து ஒடர்களுக்குக் கொடுப்பதுவும், இணையத்தளம் அமைப்பதுவும் ரோஷிணியின் பகுதி நேரச் சுயதொழில்.

ரோஷிணியின் கணவன் சுகந்தன் இங்கிதம் தெரிந்த ஆண்மகன். சகஜமாகப் பழகக் கூடியவர். அதே நேரம் உதவும் மனப்பான்மை அவருடன் கூடப்பிறந்ததோ!

வித்யாவின் அறை கீழே இருந்தது. மெல்லிய இசை காதில் ஒலிக்க தூக்கத்திலாழ்ந்தாள்.

தொலைபேசி ஒலித்தது. "வெயா ஆர் யூ (Where are you).......?" எரிந்து விழுந்தான் சுஜித்

"ஏன்? இப்ப சத்தம் போடுறீங்கள். இப்பத்தானோ என்ரை ஞாபகம் வந்தது?"

"உமக்குத் தெரியும் தானே எனக்கு நைட் டியூட்டி (night duty) எண்டு? காலமை வந்து நித்திரை கொண்டிட்டன்.... தீடீரென எழும்பினா ...நீர் எங்கை ..எண்டு எனக்கு யோசனை வந்திட்டுது".

"அப்பாடா இப்பவாவது .........என்ரை யோசனை வந்திச்சே... நான் நாயாய்ப் போயாய் அலைஞ்சன்.......... நீங்கள் என்னெடாண்டா எரிஞ்சு விழுறீங்கள்."

"நீர் என்ன சின்னப்பிள்ளையே? உமக்கு உம்முடை அலுவல் பார்க்கத் தெரியாதே?"

"தெரிஞ்சபடியாத் தான் இப்ப நீஸ்டனிலை(Neasden) இருக்கிறன். நர்மியக்கா தான் இந்த வீடு ஆரேஞ்சு (arrange) பண்ணித் தந்தவ".

"அப்ப லாஸ்ட் நைட் (last night - நேற்றிரவு) ?" சுஜித் கேலியாகச் சிரிக்க, அது அவளுக்கு வலித்தது.

'ச்சீ! என்ன இந்த ஆள்' மனதில் கோபம் எட்டிப்பார்த்தது.

ஒருவாறு சமாளித்து 'எனக்குக் ஹெட் ஏக்(headache - தலையிடி)...நான் பிறகு கதைக்கிறன். என்று போனை நிறுத்திவிட்டாள். 'சுஜித்துக்கு என்ன நடந்தது? முன்பெல்லாம் இப்படி நடந்து கொள்ளவில்லையே' ஏன்?" என்று தீவிரமாகக் சிந்தித்தாள்.

"ஓஹோ... சம்மதம் பெறுமட்டும்,..... நல்ல பிள்ளைக்கு நடிச்சிருக்கிறார், இப்ப அதிகாரம் காட்டப் பார்க்கிறாரோ?"

தொடர்ந்து "நாளைக்கு இவருக்கு நான் ஒரு நல்ல பாடம் படிப்பிக்கிறன்" என்று தன்னைத் தானே சமாதானப்படுத்தித் தலை சாய்ந்தாள்."

ஒரு தத்திச் செல்லும் நடையின் அரவம் அறைக்குள் கேட்டது. கண்விழித்துப் பார்த்தாள்.

மூன்றரை வயதுக்குழந்தை கானவி, வித்யாவிடம் "அம்மா வாட்டாம் சாப்பிட" என்றது. அந்த மழலையின் துணிச்சலும், அழகும், வாய்ச்சொல்லும் வித்யாவின் உடற்களைப்பையும் கவலைகளையும் ஒருங்கே போக்கிவிடத் துள்ளி எழுந்தாள் படுக்கையை விட்டு.

# இரங்கும் மனது

நீஸ்டனிலிருந்து (Neasden) 297 ஆம் இயக்கப் பேருந்தில் வந்து வெம்பிளி(Wembley) பிரதான வீதியில் இறங்கி ஈலிங் ரோட்டில்(Ealing road) உள்ள நூலக நிலையம் நோக்கி நடக்கலானாள்.

"வித்யாக்கா!" என்று ஒரு சிறுபையன் அவள் கையைப் பிடித்தான். அவன் அவளது மாமாவின் மகன் ஷ்யாம் அவளுக்கு மகிழ்வும், வினாவும் ஒருமித்துத் தோன்றியது.

"ஏன்? ஷ்யாம் ஸ்கூலுக்கு போகேல்லையா?" கேட்டாள்

"இல்லையக்கா...அம்மா ஹொஸ்பிட்டலில(Hospital)... நாங்கள் இண்டைக்குச் சாப்பிடல்லையக்கா............ அப்பா அம்மாவைப் பார்க்கப் போயிட்டார்"

"அம்மாவுக்கு என்ன நடந்தது ஷ்யாம்?"

"அம்மா அப்பாவோடை கோவிச்சுக் கொண்டு ஸ்லீப்பிங் டாப்லெட்ஸ் (sleeping tablets) யூஸ் (use) பண்ணிட்டா" என்று அழத்தொடங்கினான்.

"நீங்கள் அழக்கூடாது பி. ஸ்ரோங்! ஓகே?(Be strong!, ok?)!" என ஆறுதல் கூறினாள். மேலும் "என்ன செய்யுறீங்க இஞ்சை?" அன்பாகக் கேட்டாள்.

"நான் சாப்பாடு வாங்க வந்தனான் ....அக்கா அப்பா என்னை இதிலை இறக்கிப் போட்டு ஹொஸ்பிட்டலுக்கு(Hospital) போறார்".

"அப்பா சாப்பிட்டாரா?" என்று தன் பாலா மாமா பற்றி விசாரித்தாள். "இல்லை, வித்யாக்கா அப்பா நேற்றைக்கு பிறட்டைச் சாப்பிட்டுப் படுத்துட்டார்". என்றான் ஷ்யாம்.

வித்யா தன் கைப்பையைத் துழாவினாள். ஏதாவது கடையில் வேண்டிச் சமைத்துக் கொடுத்துவிட்டு வருவோம்

எனத் துடித்தது அவள் மனது. அவளிடம் இருந்ததுவோ இரண்டு பவுண்கள் மட்டுமே.

ஷ்யாமின் கையில் இருபது பவுண்களுக்கான நோட்டு இருப்பதைக் கண்ட அவள் "வாங்க ஷ்யாம், உங்கடை பசிக்கு ஏதாவது வாங்கிச் சாப்பிடுங்கோ! பிறகு வீட்டை போய்ச் சமைச்சுத் தாறன்" என்றாள்

"அய்யோ வேணாம் வித்யாக்கா! நீங்கள் கிளாஸுக்கு (class) போங்கோ!"

"நான் ஒரு கிளாஸு(class) க்கும் போகேல்லை" என்று கூறிவிட்டு அங்கிருந்த 'தமிழ்க்கடை'க்குள் புகுந்தாள் (தமிழர்கள் பொதுவாகப் பயன்படுத்தும் பொருட்களே இங்கு விற்பனையாகும்). பதினைந்து பவுண்களுக்குப் பெறுமதியான சாமான்களை வாங்கிவிட்டு ஷ்யாமிடம் ஐந்து பவுண்களைக் கொடுத்து "ஒடிப்போய் சிக்கன் அன் சிப்ஸ் (chicken and chips) வாங்கி வாங்கோ சாம்ஸ்ல(Sams- கடையொன்றின் பெயர்)" என்றாள்.

"எனக்கு சிக்கன், சிப்ஸ்(chicken, chips) பிடிக்காது. ஒரே போர் (bore)" என்று ஆங்கிலத்தொனியுடனான அவனது பதிலை வித்யா ரசித்தாள்.

ஷ்யாம் கதவைத் திறக்க, மாமாவின் வீட்டுள்ளே போனாள். இன்று இரண்டாம் தடவையாக மாமா வீட்டுக்குள் செல்கிறாள் முன்பும் ஒரு தடவை மாமாவுடன் மாமி வீட்டில் இல்லாத போது போயிருக்கிறாள். ஒரு அரை மணிநேரம் கூட அன்று அங்கு அவள் தங்கவில்லை.

வீடே அலங்கோலமாக இருந்தது. வீட்டின் நடுக்கூடத்தினுள்ளே பல உடைகள் அங்கும் இங்கும் போடப்பட்டிருந்தன. தேநீர்க் கோப்பைகள், சாப்பாட்டுத் தட்டுகள் பல இடங்களிலும் காணப்பட்டன. கழுவப்படாததால் அவற்றிலிருந்து ஓர் துர்நாற்றம் அந்த வீட்டில் பரவியிருந்தது.

வித்யாவுக்குத் துக்கம் நெஞ்சையடைத்தது. எப்படியெல்லாம் வாழ்ந்த மாமா இன்று பெட்டிப்பாம்பாகி குடும்பம் என்ற கூடைக்குள் அகப்பட்டுக் கொண்டாரே என உண்மை கனத்தது.

அதிகம் விட்டுக் கொடுத்ததால் தான் இவர் குடும்பம் இந்தக் கதிக்கானதோ என்று நினைத்தாள். ஆணும் பெண்ணும் சேர்ந்து நடாத்துவதே குடும்பம். அதை உணர மறந்த, உணரவிரும்பாத மனிதர்களை என்னவென்பது?

பிள்ளைகள் இதனால் படும் துன்பங்கள், அப்பப்பா! சரியாகக் குடும்பம் நடாத்தாமல் தமக்குள் போட்டி போடும் போது பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலை கூடச்செல்லாத போது, ஆசிரியர்கள் சோஷல் சேர்விஸுக்கு அறிவித்துவிட அவர்கள் பிள்ளைகளைக் கூடப் பெற்றோரைவிட்டு பிரித்து தங்கள் பாதுகாப்பில் வளர்க்க முற்படுவதும், எத்தகைய கொடுமை!

ஊரில் நிலைமைகள் இப்படியில்லையே, கணவன் மனைவிக்குள் பிரச்சனைகள் ஏற்படும் போது வீட்டிலுள்ள பெரியவர்களோ அயலவர்களோ தலையிடும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. மற்றவர்களுக்காகவோ, மற்றவர்கள் தம்மைக் குறைவாக நினைப்பார்கள் என்றோ தம்வாழ்க்கை முறையை மாற்றியமைப்பவர்களும் உண்டு பிள்ளைகளுக்கும் மற்றவர்களின் பரிவும் கிட்ட வாய்ப்புண்டு .

தொலைபேசி ஒலித்தது பாலா தான் வித்யாவுடன் பேசினார்.

"மாமா கவலைப்படாதைங்கோ ஷ்யாம் என்னோடைதான் இருக்கிறான் நான் சமைச்சுக் குடுக்கிறன்" என்றாள்

"எங்கடை நாட்டிலை சாப்பிட ஒழுங்கான சாப்பாடோ, தங்க ஒழுங்கான இடமோ இல்லாமல் ஆக்கள் கஷ்டப்படுகினம்" என முணுமுணுத்தாள்.

"வித்யாக்கா என்னச் சொல்றீங்கள்?" செல்லத்தமிழில் ஷ்யாம்.

"இல்லை ஷயாம்! நீங்கள் அம்மா அப்பாடை பிரச்சனையை தலையில போடாம கவனமாய் படிக்க வேணும் என்ன?!"

"சம்ரைம்ஸ் ........எனக்கு பெரிய்ய ...ஸ்ட்ரெஸ் (stress) வித்யாக்கா!" முக வாட்டத்துடன்.

அவள் தன்னுடன் அவனை அணைத்துக் தலையைக் கோதி "சீயர் அப்" (Cheer up!) வாங்கோ ...சாப்பிடுவம்" என்று ஆறுதலைத் தெரிவித்தாள். சுஜித்தின் அழைப்பால் அவள் தொலைபேசி கிணுகிணுத்தது.

# துடிப்பில் மனது!

இன்று சுஜித்தும் வித்யாவும் சஃபாரி சினிமாவில் (Safari Cinema) 'தசாவதாரம்' திரைப்படம் பார்ப்பதாகத் திட்டம் போட்டிருக்கிறார்கள். வித்யாவைப் படம் பார்க்க அழைப்பதென்றாலே பெரிய காரியம். இம்முறை வழமைக்கு மாறாகக் கேட்டவுடனே சம்மதித்து விட்டாள்.

அவள் வருவதற்கு முன்பாக சுஜித் வந்து, ஹரோ ஷொப்பிங் சென்ரரில் (Harrow Shopping Centre) அங்கும் இங்கும் ஒவ்வொரு கடைகளும் ஏறி வித்யாவுக்கென ஒரு அழகான கைப்பையை(hand bag) வாங்கினான்.

'ஆறு மணிக்கு ஷோ (Show) ஆரம்பமாகி விடுமே. இன்னும் இந்த வித்தியைக் காணவில்லையே' என்று பொறுமையிழந்து பொருமினான்.

அடிக்கடி தொலைபேசியில் வேறு அழைத்தாயிற்று. மணி ஐந்தரையை வேறு தாண்டி விட்டது.

"எல்லாமே வேஸ்ட் (waste - வீண்)" என வாய்விட்டே முணு முணுத்தான். மீண்டும் அழைத்துப் பார்த்தான். காரணம் படம் ஆரம்பிக்கச் சில நொடிகளே இருந்தன.

"நோர்த்விக் பார்க் ஹொஸ்பிட்டலுக்கு (Northwick Park Hospital) கிட்ட வந்துட்டன், இன்னும் அஞ்சு நிமிஷத்திலை வந்திடுவன்" என்றாள்.

மேலும் பத்து நிமிடங்கள் கரைந்தும் அவள் வராமல் போக, அவனுக்கு கோபம் வந்தது. அவள் அழைத்தாள் தொலைபேசியில். அவன் விடையளிக்கவில்லை. காரணம் திரைப்படம் ஆரம்பித்து விட்டது என்ற கோபமே. ஒரு குறுஞ்செய்தி அவளிடமிருந்து வந்தது. பார்த்தான். ஐ ஆம் அட் ஹோம்........டோண்ட் வேஸ்ட் யுவர் டைம் (I am at home. Don't waste your time)' என, தான் அவள் வீட்டில் இருப்பதாகவும் நேரத்தை வீணடிக்க வேண்டாம் எனவும் இருந்தது.

அவனுக்கு கோபம் கொப்பளித்தது..."டாம் இட் (Damn it)" என்று தன் காலால் அங்குள்ள தரையை உதைத்தான். அந்த இடத்தில் நின்றவர்கள் அவனை ஏறிட்டுப் பார்க்க, ஒன்றும் தெரியாதவன் போல் நடக்கலானான்.

மனதுக்குள் "ஏன் வித்யா இப்படிப் பண்ணினாள்...?" மிகவும் குழம்பினான்.. பதினைந்து மணித்துளிகளில் (நிமிடங்கள்) மீண்டும் வித்யாவின் அழைப்பு வந்தது. அதை நிறுத்த முனைந்தவன் சற்றே நிலைகுலைய முன்னே வந்த மஞ்சள் நிற லொறி (lorry) சுஜித்தின் காரை மோதியது.

-------------------------------

வித்யாவுக்கு சுஜித்தின் தொலைபேசியில் அனுப்பப்பட்ட குறுஞ்செய்தி தந்த அதிர்ச்சி அவளை ஆட்டிவைத்து விட்டது. மிகச் சிரமப்பட்டு பார்க் ரோயலிலுள்ள (Park Royal) சென்ரல் மிடில்செக்ஸ் ஹொஸ்பிட்டலுக்கு (Central middlesex hospital) போகும் போது அதிர்ச்சி தரும் விதமாக, சுஜித் சிரித்தபடி கட்டிலில் உட்கார்ந்திருந்தான்.

மன நிறைவுடன் கொண்டு வந்த கைப்பையை அங்கிருந்த கதிரையில் வைத்து விட்டு "கவனமா கார் ஓட்டக் கூடாதா? என்று கடிந்தாள்.

"எல்லாம் உம்மாலை தான்"

"என்ன" என்னாலையா?"........கேட்கும் சமயம் ஓர் வைத்தியர் குழாமே வந்தது உள்ளே.

"ஹாய்! ஐ ஆம் டொக்டர் பிலிப்ஸ், ஹவ் ஆர் யூ?" (Hi, I am doctor Philips, How are you?) என்ற படி தனது பெயர் பிலிப்ஸ் என்று அறிமுகப்படுத்திய படி உள்ளே நுழைய, அவர்களுக்கு இடம் கொடுத்து சற்று விலகி அங்கு நடப்பவைகளை நோட்டம் விடலானாள்.

சுஜித் தங்கியிருந்த அந்தப் பகுதியில் ஆறு கட்டில்கள் போடப் பட்டிருந்தன. அரசாங்கத்தின் அனுசரணையில் இயங்கும்

வைத்தியசாலையான போதும் பளிச்சென்று இருந்தன தரைகள். ஒவ்வொரு கட்டிலுக்கும் போடப்பட்ட மறைவுகளும் மிகச்சுத்தமாக, அதேநேரம் மடிப்புக் கலையாமல் தொங்கின.

எம் நாடுகளில் பணமே குறியாக இயங்கும் தனியார் மருத்துவ மனைகள் கூட இந்தளவு சுத்தமாக இருக்காதே. அரச மருத்துவ மனைகள் ஏதோ குற்றவாளிகள் கொண்ட கூடாரங்கள் போன்று காணப்படுமே!

இங்கு வைத்தியர் கூட மிக சகஜமாகப் பழகுகிறார். தானே திரைச்சீலைகளை இழுத்து மூடுவதும், திறப்பதும், நோயாளிகள் ஒவ்வொருவரையும் கைகளுக்கு உறைகள் இட்டுத் தொட்டுப் பேசுவதும் பின்னர் அவற்றைக் களைந்து கைகளக் கழுவுவதும் பின்னர் சிரித்த முகத்துடன் அடுத்த நோயாளியை அணுகுவதும் பார்க்க மனதுக்கு இதம் அளிக்கிறது.

எமது நாடுகளில் வைத்தியர் என்றதும் அவர்களைக் கனம் பண்ணுவது என்ற பெயர்களால்அவர்க்ளுக்குப் பயந்து நடப்பது.........அது அவர்களின் மீது நம்பிக்கையையும் அந்நியோன்யத்தையும் வளர்க்காதே! பல நோயாளிகள் 'மதிப்புக் கொடுத்தல்' என்ற பெயரில் வைத்தியர்களுடன் சரியாகக் கூடப் பேசப் பின் நிற்பார்களே! வைத்தியர்கள் மதிக்கத் தக்கவர்கள் தான், ஆனால் அவர்கள் அண்மிப்பு நோயாளிக்கு ஒரு பாதுகாப்புத் தன்மையைத் தோற்றுவிக்கும் என்பதை மறுப்பவர் யார்?

சுஜித்தைப் பார்வையிட்டு அவர்கள் நகர்ந்ததும் அவனருகில் போன அவள் "என்ன சொன்னிங்கள், என்னால தான் உங்களுக்கு ஆக்ஸிடண்ட் (accident .– விபத்து) நடந்ததோ?" என்றாள்.

"யெஸ், யூ டிடின்ட் கம் டு த சினமா அஸ் யூ ப்றொமிஸ்ட்(Yes!, You didn'r come to the cinema as you promised)" என்றான்.

“ஓ, அதுவா, நான் வேணுமெண்டு தான் உங்களை டிஸப்பொயிண்ட் (dissappoint – குழப்புதல்) பண்ணினனான்” என்றாள்.

“வொட் (What)?” என்றான் நம்ப முடியாதவனாய்.

நான் வீடு இல்லாமல் அலைஞ்சதுக்கு நீங்கள் நக்கலடிச்சுச் சிரிச்சீங்கள் அதுக்கு தான் உங்களை ரோட்டிலை(road) வெய்ட்(wait) பண்ண வச்சுப் பார்த்தனான். இப்ப தெரிஞ்சிருக்கும் என்ரை வேதனை.

“யூ நோட்டி(You naughty)” என்று அவள் குறும்பை இரசித்தான்.

“நீங்கள் இப்படி ஹொஸ்பிட்டலுக்கு(hospital) வருவீங்கள் எண்டு நான் கனவிலும் நினைக்கேல்லை. சொறி(sorry)” என்றாள் வித்யா.

இருவர் கண்களும் கலந்தன.

# ஆறுதல் சொல் மனது

தொலைபேசி ஒலித்தது.

`காலை........... அதுவும் இந்த அதிகாலை...... யார் தொலைபேசியில்?` என்று நினைத்த படி மறுபக்கம் திரும்பிப் படுத்தாள் வித்யா.

தொலைபேசி அழைக்கும் ஒலி நின்றது. அதைத் தொடர்ந்து "ஐயோ அம்மா..... "என்று ரோஷிணியின் அழுகையுடன் கூடிய கூக்குரலால் அவள் வெளியே பாய்ந்து வந்தாள்.

"ஐயோ! வித்யா.... என்ரை அம்மா போயிட்டாங்க." ரோஷிணி குழறினாள்.

'பிளீஸ் (please) அக்கா... உங்களை வருத்தி அழாதேங்கோ! உங்கடை உடம்புக்கு கூடாது!

"நான் எப்படி அழாமல் இருக்கிறது? என்ரை அம்மா இந்தளவு சின்னவயசிலை.... போறதுக்கு அவள் சஹானா தான் காரணம்". ஆவேசம் இருந்தது ரோஷிணி குரலில்.

"அக்கா கொஞ்சம் பொறுங்கக்கா... சுகந்தன் அண்ணைக்கு இன்பாம் (inform) பண்ணுவம்" என்றாள் வித்யா.

"அவர்தான்...... போன் (phone) பண்ணினவர்........ அம்மா!............ அம்மா!..........!" என்று மேலும் அழுதாள்.

'உங்கடை தம்பி சயந்த்....?"

"அவன் வேலைக்கு போயிட்டுவந்து......... நித்திரை கொள்ளுவான் ..........அவனிட்டை எப்படிச் சொல்றது .........அவனை நினைச்சு நினைச்சுத்தான் அம்மா இண்டைக்கு ஓரேயடியாப்....... போயிட்டா!"

ரோஷிணியின் தம்பி சயந்த் இணையத்தில் சந்தித்தவள் தான் மலேசியாவைச் சேர்ந்த சஹானா. இருவரும் பகலிரவாக இணையத்தில் காதலித்திருக்கிறார்கள். அவள் வீட்டில் அவர்கள் காதலுக்கு அனுமதி கிடைக்காது என்றிருக்கிறாள் சஹானா..

அவளைப் பிரிந்து வாழமுடியாமல் தவித்திருக்கிறான் சயந்த். தன் விருப்பத்தைத் தன் பெற்றோரிடம் தெரிவித்துத் தான் அவளை மனைவியாக்கி அழைத்து வர இருப்பதாகத் திடமாகக் கூறிவிட்டான்.

தாய் மறுத்தாலும் மகன் அதைக் கண்டு கொள்ள மாட்டான் என்று புரிந்த, அதேநேரம் மகனின் நல்வாழ்வு, மகிழ்வு இவற்றைக் கருத்தில் கொண்டு பச்சைக்கொடி காட்டி விட்டார் தாய்.

மனம் மகிழ்ந்த மகனும் மலேசியா போய் மிக இரகசியமாக, அவள் வீட்டார் ஒருவருக்கும் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்து அவனது காதலி சஹானாவை அழைத்து வரும் ஒழுங்குகள் செய்திருக்கிறான்.

சஹானா தன் தொழிலுடன் சார்ந்த தொழில் அமைந்தால் தான் பிரான்ஸ் வருவதாய்க் கூறி வரமறுத்துவிட்டாள்.

மிகவும் தவித்துப் போனான் சயந்த். அவள் இல்லாமல் தன்னால் வாழமுடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட சயந்த் படாதபாடு பட்டு அவளுக்கு ஒரு வேலைகூடத் தேடிக் கொண்டிருக்கிறான். அவள் தான்...... பிரெஞ்சு தெரிந்தவள் ஆச்சே!

ஒருவாறு அவள் பிரான்ஸ் (France) வந்து சேர்ந்தாள். வந்த மறுநாளே தான் வேறுவீடு போய்விட வேண்டும் என அடம்பிடித்தாள். அவனுக்கு என்ன செய்வது என்றே தெரியிவில்லை.

ரோஷிணியின் தாயார் வீடு எடுக்கும் சிரமத்தை தெளிவுபடுத்த விழைந்திருக்கிறார். அவரை மிகவும் மரியாதைக்

குறைவாக ஏசி "யூ ஆர் அன் ஓல்ட் வுமன் (You are an old woman)" உனக்கு வயதாகிவிட்டது எனச் சத்தம் போட்டு ஏதேதோ கேவலமாக வேறு பேசியிருக்கிறாள்.

அதுவே பேரிடியாக ஆகிவிட்டது சயந்த்தின் அம்மாவுக்கு. 'என் மகன் மென்மையானவன். ஏன் தான் தன் தலையில் இப்படி ஒர் பெருஞ்சுமையைச் சுமக்க முற்பட்டானோ' என்று மிகவும் மனம் வருந்தினாள்.

சஹானா மாமியார்க்கு நல்ல மருமகளாக மட்டுமல்ல, கணவனுக்கு மனைவியாகக் கூட வாழமறுத்துவிட்டாள்.

எப்படி இவளைக் சமாதானப்படுத்துவது என்றியாத சயந்த், அவளைக் கவர்வதற்கு ஒரு புத்தம் புதிய காரைக் கூட சஹானாவிற்கு வாங்கிக் கொடுத்திருக்கிறான்.

அதற்கும் சஹானா மசியவில்லை. இரண்டு நாட்களில் வேலைக்குப் போன சஹானா வீட்டுக்கே திரும்பவில்லை. அழைத்தால் அவளது கைப்பேசியிலும் பேசவில்லை.

பயந்தபோன சயந்த் பொலிஸில் அறிவித்திருக்கிறான். 24 மணி நேரங்கழித்து விசாரணை நடத்திய பொலிஸ் சயந்தை தங்களிடத்துக்கு வரும்படி கூற, அவனும் படபடத்த நெஞ்சோடு அங்கு போயிருக்கிறான்.

அங்கே சென்று பார்த்தால், அங்கே சஹானா இன்னுமோர் வாலிபனுடன் வந்து இவன் மீது புகார் செய்திருக்கிறாள். என்னவென்றால் சயந்த் தன்னைத் தாயுடன் சேர்ந்து துன்புறுத்துவதாகவும் தனக்கு அவனால் எதுவித அச்சுறுத்தலும் இருக்கக் கூடாதென்றும் கூறியிருக்கிறாள்.

சஹானாவின் காதலன் அவளை இங்கு வரவழைக்க போட்ட திட்டம் தான் அதுவாம். சஹானா பிரான்சுக்கு வருவதற்கு சயந்த் என்ற வாலிபனின் பிரஜாவுரிமையுடன் கூடிய கடவுச்சீட்டும் பத்திரங்களும் தேவைப் பட்டிருக்கின்றன.

இதனைக் கேட்ட தாய், ஒரிரு நாட்களிலேயே ஒர்பக்க உடல் செயலிழந்து போனாள். பிரான்ஸில் இருக்கப் பிடிக்காமல் சயந்த் இங்கிலாந்து வந்துவிட்டான். தான் இனி எந்தப் பெண்ணையும் மணமே முடிப்பதில்லை, என்று வேறு அழுத்தமாக கூறிவிட்டான்.

ரோஷிணியின் தந்தையார் தான் அரசு உதவியுடன் தன்மனைவியைக் கவனித்து வந்திருக்கிறார்.உயர்குருதியமுக்கம் காரணமாக இதயப் பாதிப்புற்று இன்று இறந்தும் விட்டார்.

'வெளிநாடு வர வேண்டும் என்பதற்காக ஓர் குடும்பத்தையே சிதைத்து விட்டாளே சஹானா, மனிதாபிமானம் இப்படி மலிந்துபோய் விட்டதே' என மிக வருந்தினாள் வித்யா.

# வெகுண்ட மனது

கே.எப்.ஸி (K.F.C) யில் வேலைக்குச் சேர்ந்து ஆறு மாதங்கள் ஆகி விட்டன. அவளுக்கும் உதவி முகாமையாளருக்கும் ஏனோ ஒத்துவரவில்லை.

வேலைக்குச் சேரும் எந்தப் பெண்ணையும் தன்னுடன் 'அவுட்டிங் (outing)' என்ற பெயரால் வெளியே கூட்டிக் கொண்டு போக வேண்டும் என்ற வெறிகொண்ட குணமுள்ள ஒரு வட இந்தியன் இந்திரஜித்.

எனது உத்தியோகத்தைச் சாதகமாக்கிப் பலரையும் தனது விருப்பத்துக்கேற்றபடி இணங்க வைக்கும் குணம் கொண்டவன் அவன்.

அவரது வக்கிரமான ஜோக்ஸ்(jokes) என்று 'தான் கூறும் விளக்கங்கள்' யாவற்றுக்கும் எல்லோரும் சிரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பான். இத்தனைக்கும் அவனுக்கு வயது அறுபதை அண்மிக்கும்.

பல வருடங்களாகப் பல கிளைகளில் வேலை பார்த்த இவனுக்கு ஒரு நர்ஸிங்ஹோம் (Nursing Home) இல் மனேஜராகப் பணிபுரியும் அசோக் நண்பன். அவன் மூலம் வேர்க்பெர்மிட் (Work Permit) வாங்கிக் கொடுத்திருக்கிறான் பலருக்கு. (காரணம் வேர்க் பெர்மிட் உள்ளவர்களுக்கு அதிக நேரம் வேலை செய்யலாம், அத்தோடு வேலையெடுப்பதும் சுலபம்)

அஷோக், நர்ஷிங்கு (nursing) க்கு எனப் பெண்களை இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து வரவழைத்து அடொப்ரேஷன் நர்ஸிங் (adaptation nursing) பயிற்சி செய்வதற்கு இத்தனை ஆயிரம், வேர்பெர்மிட்டுக்கு (Work permit) இத்தனை ஆயிரம் அல்லது இத்தனை இரவு(!) எனப் பேசும் மனித விலங்குகளில் ஒருவன்.

இவையெல்லாவற்றையும் அந்த நர்ஸிங் ஹோமில் (Nursing Home – இங்கிலாந்தைப் பொறுத்தவரை உடல் இயக்கம்

குன்றிய அல்லது வயோதிபர்களைப் பராமரிக்கும் நிலையம்) பணிபுரியும் ஒரு சினேகிதி மூலம் அறிந்திருக்கிறாள் வித்யா. லஞ்சம் ஆசிய, ஆபிரிக்கா நாடுகளிலிருந்து பரவி ஐரோப்பாவிலும் நடமாடுகிறது. இந்த ஆட்கொல்லி பரவினால் உலகமே சாக்கடை தான்.

இந்தச் சாக்கடையில் அமிழ்ந்து போன கல்விக் கூடங்கள் எத்தனை! இதனால் நாடுதிரும்பப் பிடிக்காமல் தற்கொலை கூடச் செய்துள்ளனர் சில குஜராத் இளைஞர்கள்.

இந்த இந்திரஜித்துக்கோ பெண்கள் என்றால் போகப் பொருளாகவே தெரிகிறது. வித்யாவுக்கும் கூட அவன் வேர்க் பெர்மிட் (work permit) கொடுப்பான் அவள் அவன் விருப்பத்திற்கு சம்மதித்த பட்சத்தில்.

'ஏன்? இன்று தன் அலுவலகத்துக்கு வரச்சொன்னான்' என்று மனதுக்குள் கறுவினாள் வித்யா. அங்கே மனேஜர் முன்னிலையில் இவளுக்கான குற்றச் சாட்டுகளுடன் அப்பாவி போல் இந்தரஜித் அமர்ந்திருந்தான்.

மனேஜரோ (manager) வெள்ளைத் தோலுடையவள், ஆனால் அவள் பேசும் ஆங்கிலம் வேறு தேசத்தவள் அவள், என்பதைப் பறைசாற்றின.

வித்யா சக ஊழியர்களுடன் ஆங்கிலம் அல்லாத மொழியான தமிழில் பேசுவதால் பல வாடிக்கையாளர்கள் அதிருப்தி கொண்டு முறைப்பாடு செய்ததாகவும் கேட்ட வித்யாவுக்கு ஆத்திரம் தாளவில்லை. அவளுடன் வேலை செய்யும் மற்றுமோர் தமிழ்ப்பெண் பைரவியையும் வேறு டிபார்மென்ட்(department) மாற்றிவிடுவதாகவும் கூறினார்கள்.

வித்யா பகுதிநேர வேலை செய்பவள் தான் ஆனால் கெட்டிக்காரி, தன் வேலையோடு பல வேலைகளிலும் திறமையும், அக்கறையும் உள்ளவள். பொதுவாகத் தன் சக ஊழியரை வேலைத்தலத்தில் ஆங்கிலத்தில் பேசும்படி அறிவுரை சொல்பவள். அவளுக்கா இந்தக் கதி?

இதைச் சுஜித்திடம் கூற அவளுக்குப் பயம், ஏனெனில், அதனால் சுஜித்துக்கும் நிர்வாகத்துக்கும் கூடப் பிரச்சனைகள் வர வாய்ப்பிருக்கிறதே!

சில நேரங்களில் மௌனம் பெரிய பங்காற்றுகிறது. "ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு" என்று பழமொழி வேறு இருக்கிறதே. ஆகவே வித்யா மௌனம் காத்தாள்.

அறையை விட்டுக் கிளம்பும் போது ஒன்றை மட்டும் மனேஜரிடம் மென்மையாகச் சொன்னாள். இனிவரும் காலங்களில் தகுந்த ஆதாரத்துடன் குற்றச்சாட்டுகளை முன்வைத்தால் நன்று, என்று கூறினாள்.

'அப்பாடா! இலண்டன் வந்து நான் எத்தனை விடயங்கள் பார்க்கிறேன். நான் கண்ட அனுபவங்களே இவ்வளவென்றால் காணாதவை இன்னும் எவ்வளவு இருக்கின்றனவோ! இனியும் காணப்போகும் அனுபவங்கள் எத்தனையோ!!' அவள் உள்மனது பொருமியது.

வேலைமுடிந்து வீடு போனதுமே, நர்மதாவுக்கு இந்த விடங்களைத் தொலைபேசியில் ஒப்புவித்ததும் தான் அவளுக்கு நிம்மதி கிடைத்தது. ஆனால் நர்மதா அவளுக்குச் சொன்ன புதினங்கள் மனதை துன்பப்படுத்தின.

கடந்தவாரம் நர்மதாக்கா தன் கணவன் குறிப்பிட்ட கால எல்லை கடந்து நல்லவிதமாகச் செயற்படுகிறார் என்று மிகச் சந்தோஷமாக இருந்தாரே.

நர்மதாக்காவின் கணவர் சுரேஷ், ஒரு கிழமை 'நல்ல பிள்ளை வேடம்' போட்டதாகவும் மீண்டும் குடித்துவிட்டு வீடு வந்ததாகவும் தன்னை அடிக்க முற்பட்டதாகவும் பிள்ளைகள் பயப்பட்டு அழுததாகவும் கூறி நர்மதாக்கா இன்று அழுதது வித்யாவுக்கு வேதனை தந்தது.

'இந்த சுரேஷ் அண்ணையத் திருத்தவே ஏலாது' என்று வித்யா தனக்குள் அலுத்துக் கொண்டாள்.

# அயராத மனது

இன்று வித்யா இந்த இன்டர்நெட் (internet) வணிகத்தலத்தில் ரிசப்ஷனிஸ்ட்டாக (receptionist) வேலை பார்க்கிறாள். ஒரு விதத்தில் இவள் இந்த நிலையத்தின் பங்குதாரர் என்று கூடச் சொல்லலாம்.

கே.எப்.சி. (KFC) யில் பட்ட அனுபவங்களால் அங்கு வேலைக்குப் போவதை எப்படியும் தவிர்க்க வேண்டும் என்று விரும்பினாள்.

சந்தர்ப்பம் தானே மனிதனை வாழவைக்கிறது!

அந்த உதவி முகாமையாளர் இந்திரஜித் கொடுத்த தொல்லை வித்யாவைப் பலவாறாகச் சிந்திக்க வைத்தது.

தன் சகபல்கலைக்கழக நண்பன் அன்ரனியுடன் கலந்தாலோசித்தாள். இருவருமே கணனியில் வல்லவர்கள், இது சம்பந்தமாகத் தொழில் தொடங்கினால் என்ன என்று சிந்தித்தாள். இருவருமே பகுதி நேரம் தான் வேலை செய்ய முடியும்.

சுயதொழில் ஆரம்பிப்பதென்றால் இங்கிலாந்தில் பல சட்ட விதிமுறைகளாச்சே! இவர்களிடம் உள்ள மூலதனமே நேர்மை, ஊக்கம், உழைப்புக்குத் தயார் என் தீவிரநிலை என்பவை தான்.

சந்தர்ப்பங்கள் எம்மைத் தேடி வராத போது சந்தர்ப்பங்களை நாமே உருவாக்க வேண்டும் என்பார்கள். வேலை கொடுப்பார்கள் இல்லை என்கிற பட்சத்தில் வேலையை உருவாக்குதல் நன்று, என்று இரு நண்பர்களும் சிந்தித்தனர்.

இவர்கள் தாம் ஒரு தொழிலை வேறு எவரோ பெயரில் பதிவு செய்து அவர்களுக்கும் வருமானம் வர வழி அமைக்கலாமே என்ற முடிவுக்கு வந்தனர். இன்னும் இரு பல்கலைக்கழக மாணவர்க்கும் வேலை தேடிக் கொடுக்கும் இனிய வாய்ப்பும் இவர்களுக்கு அமைந்தது.

ஆம்! இவர்கள் தங்கள் கம்பெனியை (Company) வித்யா தங்கியிருக்கும் வீட்டார் ரோஷிணியின் கணவர் சுகந்தன் பெயரில் பதிவு செய்து இந்த இண்டர்நெட் கபே (internet cafe) யில் வித்யா ரிஷப்னிஸ்டாக(receptionist) வேலை செய்கிறாள்.

துன்பங்களைக் கண்டு பயப்படுவதோ ஒடுவதோ வாழ்வின் துன்பத்தைப் பெருக்குமேயோழிய நிம்மதியைத் தேடித் தரமாட்டாது.

அது மட்டுமல்ல சிந்தனையின் வடிவங்கள், எம்மைப் பற்றிய மதிப்பீடுகள், நம்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை, இப்படிப் பலவும் தான் கொட்டிக் கிடக்கின்றனவே! 'வாடி நின்றால் ஒடுவதில்லை' அழகான கண்ணதாசன் வரிகள்.

இந்தத்தலத்தில் பல சேவைகளையும் அறிமுகப்படுத்தி வெற்றியும் கண்டனர் வித்யா குழுவினர்.

தொலைநகல் (fax) அனுப்பவோ மின்னஞ்சல் (E-mail) அனுப்பவோ கணனிக்கு பிரதிகளை அனுப்பவோ, ஸ்கான் (scan) பண்ணவோ, பிரதிகளை உண்டு பண்ணவோ (photostat), வெளிநாடுகளுக்கு மலிவாக தொலைபேசியிலழைக்கவோ வீடியோவில் ஒருவரையொருவர் பார்த்துக் கதைக்க ஒழுங்கமைக்கவோ எனப் பல ஏற்பாடுகளையும் இன்முகத்துடன் அளித்தனர்.

அதிக உடலுழைப்போ, அலைச்சலோ இன்றி மற்றவர்கள் அதிகாரமின்றி அவள் பணி அமைந்த வேளை மேலுமோர் புயல் அவள் வாழ்விலடித்தது.

'இண்டர்நெட் கபேக்கு' (Internet café) வழமையாக வந்துபோகும் வாடிக்கையாளர்களில் ஒருத்தி தான் ஷர்மிளா எனப்படும் அந்த நேபாளிப் பெண். அவளின் தோற்றம் ஒரளவு சீனர்களின் வாகும் கலந்திருக்கும். சற்றுக் குள்ளமான போதும் அழகாகச் சிரிப்பாள். கபடமின்றிப் பேசுவாள்.

தினமும் மதியம் இரண்டு மணி நேரம் சாட் (chat) செய்வாள். இன்று 'வெப் கமெரா' (web camera) வேண்டுமென்றாள். காரணம் அவள் காதலன் கேட்டதற்கிணங்க இன்று தான் கமெராவில் தோன்றவேண்டுமென்றாள். 'வெப் கமெரா' (web camera) எப்படி இயக்குவது என்று தெரியாமல் திண்டாடினாள் ஷர்மிளா.

அவளுக்கு உதவி செய்யப் போன வித்யா அதிர்ச்சியில் உறைந்து போனாள். அந்தநேபாளிப் பெண்ணுடன் பேசிக் கொண்டு மறுமுனையில் உட்கார்ந்திருப்பவர் வித்யாவினது காதலன் சுஜித்.

அவளால் அவ்விடத்தில் நிற்கவே முடியவில்லை. அருகிலிருந்த சுழலும், நகரும் தன்மையுள்ள நாற்காலியில் படாரென்று அமர்ந்து விட்டாள். கைகளும் கால்களும் நடுங்குவதை உணர்ந்தாள். அந்தக் குளிரிலும் முகம் குப்பென வியர்த்தது. ஷர்மிளா "ஆர் யூ ஓல் ரைட்? (Are you alright?)" எனத் தனக்கேயுரிய பாணியில் வித்யாவின் சுகம் விசாரித்தாள்.. அந்த வேளை எதிர்பாராமல் அன்ரனி அங்கு வந்துவிட்டான்.

தன்னைச் சுதாகரிக்க முனைந்த வித்யா "அன்ரனி நீங்க ஹெல்ப் (help) பண்ணுங்க.... நான் வாறன்" என்று கூறி அவ்விடத்தை விட்டு மெல்ல அகன்றாள்.

ஏதும் அறியாத அந்த நேபாளப்பெண்ணான சர்மிளாவோ 'கான்' ஐ நோ ஹவ் ரூ யூஸ் இட்?" (Can I know how to use it?) என்று, அந்த ஸ்கானரை எப்படிப் பயன்படுத்துவது என அன்ரனியிடம் கேட்டுக் கொண்டாள். வித்யாவோ செயலிழந்து தன்னிருக்கையில் உட்கார்ந்தாள்.

# காதல் மனது

காலையிலிருந்து எத்தனையோ தடவைகளுக்கு மேல் கைத்தொலைபேசி ஒலிக்கிறது.. அதை எடுப்பதும், யார் என்று பார்ப்பதுவும், சுஜித் என்று தெரிந்ததும், மௌனம் காப்பதுமாக வித்யாவின் நாள் இன்று கழிகிறது.

சுஜித் மீதுள்ள கோபத்துக்கு தொலைபேசியின் இயக்கத்தை முற்றாகவே நிறுத்தி வைக்கலாம் தான். ஆனால் அது தான் முடியாதே மாமா தான் அடிக்கடி அவளை சுகம் விசாரிப்பாரே!

சுஜித் வீடு தேடி வரக்கூடும் தான், ஆனால் வித்யா பொதுவாக ஒரு விருந்தினரையும் வீட்டினுள் அனுமதிக்காமலே வைத்து இருக்கிறாள். இந்த நிலையில் அவன் அங்கு வருவதற்குப் பின் நிற்கவே செய்வான்.

இன்று வித்யா அவனிடம் இருந்து விலகி இருந்து விடலாம். எத்தனை நாளுக்குத் தான் இது சாத்தியம்?

சுஜித்தின் காதலைத் தான் ஏற்றது மிகப் பெரிய தவறு என மிகவும் வேதனைப்பட்டாள் வித்யா.

இவ்வளவு காலமும் 'சிவனே' என எதுவிதப் பிரச்சனைகளுக்கும் போகாமல் இருந்த வித்யா வீணாக இவனைக் காதலிக்கச் சம்மதம் தெரிவித்தமை குறித்து மிக மனம் புழுங்கினாள்.

இப்போதும் கைத்தொலைபேசி ஒலித்தது. அவள் பிரச்சனைக்கு முகம் கொடுத்தே தீர்வது எனத் தீர்மானித்து பதிலளிப்பதற்கான பொத்தானை அழுத்தினாள்.

"ஹலோ! ஸ்வீட்டி (sweety)............ ஏன் போனே எடுக்கவில்லை" இனிமையாகப் பேசினான் சுஜித்.

"மண்ணாங்கட்டி! ஸ்வீட்டி (sweety)... போதும் உங்கடை சகவாசம்" எரிந்து விழுந்தாள் வித்யா.

"வித்தி! என்ன நடந்தது? வை ஆர் யூ இன் பாட் மூட்? (Why are you in bad mood?) ஏன் இப்படி கவலையாக இருக்கிறீர்" என்றான்.

"நீங்கள் என்னைச் சர்மிளா என்று நினைச்சீங்களோ" என்றாள்.

"(சிரித்தபடி)...... அது யார் சர்மிளா............ கூ இஸ் தட் (Who is that.?)...... யாரது?" என்றான் சுஜித்

"உங்கடை வெள்ளைத் தோல் கேர்ள் பிரண்ட் (girl friend) தான். போதும் உங்கடை சகவாசம்" என்று வெறுப்புடன் தொலைபேசியைத் துண்டித்தாள்.

வித்யாவின் இதயம் மிக மிக வேகமாகத் துடித்தது. "இப்படி ஒரு அயோக்கியனைக் காதலித்துத் தொலைத்தேனே" என மிகக் கலங்கினாள்.

"லண்டனுக்கு வந்து புதிதாக ஒரு பிரச்சனையை தலையில் கட்டிக் கொண்டோமே" என மிகவும் வெதும்பினாள் வித்யா.

மீண்டும் தொலைபேசி ஒலித்தது. "யார்?" என்று மனதுள் கறுவிக்கொண்டு எடுத்தாள். அது நர்மதாவிடமிருந்து வந்த அழைப்பு.

முதலில் தயங்கிப் பின் துணிவை வரவழைத்துக் பதிலளிக்க விழைந்தாள்.

"ஹலோ..............! நர்மதாக்கா! எப்படி இருக்கிறீங்கள்?" என்றாள்

"நான் நல்லாயிருக்கிறன். ஏன் ............உன்ரை குரல் ஒரு மாதிரி இருக்குது?"

"அப்படியா நான்.... இப்ப... தான்.... நித்திரையில இருந்து எழும்பினனான்" என்று சமாளித்தாள்.

"எனக்கு கதை விடாதை....... நீ சொல்லு என்ன பிரச்சனை" என்று அடம்பிடித்தாள்.

"நர்மதாக்கா! ..........ஒரு விஷயத்தை மறைச்சிட்டன்... மன்னிச்சுக் கொள்ளுங்கோ!" என ஒ வென அழுதாள். வித்யா வீட்டில் எவரும் இல்லாதது அவளுக்கு வசதியாய் போய்விட்டது. ரோஷிணி தான் கடைக்குப் போய்விட்டாளே!

"என்ன! வித்யா என்ன நடந்தது?............. உடனே சொல்லு எனக்குப் பயமாக் கிடக்கு........" என்று அவசரப்படுத்தினாள்.

"அது.... வந்து.... நான்... சுஜித்தை ..." என்று அழுதாள்.

மறுமுனையில் இருந்து பதிலேதும் இல்லை.

"நர்மி அக்கா! என்னக்கா பேசாமல் இருக்கறீங்கள்" என்று அழுகையுடன் கத்தினாள் வித்யா.

"நான் என்னத்தை இதில.......சொல்றது நானே என்ரை வாழ்க்கையைத் துலைச்சுப் போட்டு இருக்கிறன்" என்றாள் நர்மதா.

"நீங்கள் மட்டுமில்லை நானும் தான்" என்றழைத்தாள் வித்யா என்று தொடங்கி நடந்தது யாவற்றையும் வித்யா நர்மதாவுக்குச் சொன்னாள்.

வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது. தொலைபேசியைத் துண்டித்து விட்டு வந்து கதவைத் திறந்தாள் வித்யா.

சுஜித் கையில் பிஸ்ஸா (pizza) உள்ளடக்கமான பெட்டியுடன் நின்றிருந்தான்.

வித்யா வேகமாகக் கதவைச் சாத்த முற்பட்டாள். வித்தீ வெய்ட் (wait) என்றபடி வேகமாக உட்புகுந்தான்.

அழுதழுது வீங்கியிருந்த கண்களுடனும் சீவப்படாத தலைமுடியுடனும் காட்சியளித்த வித்யா, "ப்ளீஸ் லீவ் மீ அலோன் (Please leave me alone) என்னைத் தனியா இருக்க

விடுங்கோ" என்ற அவளை அவன் "உஷ்!!! சத்தம் போடதையும்.... நான் இப்ப பிரச்சனை என்ன என்று கண்டுபிடிச்சிட்டன்." என்றவன் தொடர்ந்தான்.

"ஷர்மிளா வோட பாய் பிரண்ட் (boy friend) என்ற என்ரை சீட்ல (seat) இருந்து சாட் (chat) பண்ணினா நானா பொறுப்பு" என்றாள். தனது நண்பன், தன் கணனியைப் பயன் படுத்தியதாகவும் அவனுக்குத் தானுதவி புரிந்ததாகவும் கூறினான்.

எத்தனையோ விளக்கங்கள் கொடுத்து, வித்யாவைச் சமாதானஞ் செய்து, சமாளித்துத் தான் கொண்டு வந்த பிஸ்ஸாவை (pizza) உண்ண வைத்தே அவ்விடத்தைக் காலி செய்தான் சுஜித்.

அவன் அகன்று அவனது கார் பிரதான வீதிவழி புறப்படவும் ரோஷிணியின் கார் அத்தெருவுக்குள் நுழைந்தது.

# பாச மனது

இன்று ஈலிங் (Ealing) அம்மன் கோவிலுக்குப் போய் வரும் போது, தான் சின்ன வயதில் தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவிலுக்குப் போய்வந்த ஞாபகம், வித்யா நினைவலையில் சிக்கித் தவித்தது.

எப்படியெல்லாம் இனிமையாகச் சுற்றவர வாழைமரங்கள், சிதம்பரத்தைச் செடிகள் நிறைந்த பூக்கள், கிணறு, வாளி என அமைந்துள்ள சூழலைக் கொண்ட வீட்டில் வாழ்ந்த இனிய காலங்கள்!

பெற்றோர், இரண்டு அண்ணன்மார், ஒரு தங்கை, வித்யா என அழகான குடும்பம் தான் இவர்களது. மூத்த அண்ணன் வித்யன் பாடசாலைக்குப் போனவர், ஒரு நாள் வீடு திரும்பவே இல்லை. காலம் அவர் விடுதலை இயக்கம் ஒன்றுடன் இணைந்ததைத் தெரிவித்தது. வீட்டிலிருந்த மகிழ்ச்சி சொல்லாமலே விடை பெற்றது.

அடுத்த அண்ணன் நித்யன் தானுண்டு, தன் பாடுண்டு என்று ஆழ்ந்து படிப்பில் ஈடுபட்டவன், ஒரு நாள் தந்தையின் மோட்டார் சைக்கிளில் பாடசாலையால் வரும் போது ஆகாயம் வழி சென்ற போர்விமானம் 'புக்காரா' போட்ட குண்டிற்குப் பலியாகி, இன்னுயிரை இழந்து போனான். அப்போது ஒரு காலை இழந்த அப்பாவும், படுக்கையில் வீழ்ந்தார்.

வித்யாவுக்காவும் தங்கை விருஷிகாவுக்காவும் தாய், தந்தையர் தம்முயிர்களைச் சுமக்க வேண்டியவர்களாயினர். இடம்பெயர்வுகள் தந்த அவலங்கள், வித்யாவின் தந்தையையும் பலியெடுத்தது.

தன் சின்னமகனுக்கு ஏற்பட்ட துர்மரணம் கண்ட, வித்யாவின் அம்மாவுக்கு தனது மூத்தமகன் வித்யன் போராட்டத்தில் இணைந்தது குறித்துத் திருப்தியே என்று கூடச் சொல்லலாம்.

இப்படியான துன்பமான தருணங்களிலெல்லாம் அம்மாவின் அண்ணாவாகிய பாலா மாமா மிகவும் ஆதரவாக இருந்திருக்கிறார். அப்படிப்பட்ட உதவும் தன்மையுள்ள மாமாவின் வாழ்வில் தான் எவ்வளவு மாற்றங்கள்!

மாற்றம் ஒன்று தானே மாறாதது.

அந்த மாற்றத்தில் ஒன்று தான் வித்யாவின் மூத்த அண்ணா வித்யனின் திருமணம். ஆம்! அவருக்கும் ஒரு போராளியின் தங்கைக்கும் திருமணம் நடந்து விட்டதாகவும் வித்யா வீட்டார் கேள்வியுற்றார்கள்.

காதல் திருமணமாம் அது. அண்ணன் போராளி என்பதால் அவள் அங்கு பெற்றோருடன் வாழ்ந்து வந்த வேளை வித்யனுக்கு அவளைப் பிடித்துக் கொண்டதாம். அவர்களுக்கும் வித்யனைப் பிடித்துப் போய் விட்டதால் ஆரம்பகாலம் முதல் உறுப்பினராக இருந்த வித்யனுக்கு கல்யாணமும் ஆனது. இரண்டு பிள்ளைகளுக்கும் தந்தையானான்.

இடம்பெயர்ந்தாலும் வித்யாவுக்கு கல்வியின் மீதுள்ள மோகம் குறையவில்லை. தனக்கு இயன்றதைக் கற்றாள். மற்றவர்களுககும் சொல்லிக் கொடுத்தாள். இருந்த தகைமைக்கு ஏற்ற விதமாக அங்குள்ள கல்விக்கூடங்களில் ஆன பணிகளைச் செய்தாள். கிடைத்த வருமானத்தை தங்கையின் கல்விக்கும் தன் தாயின் கைச்செலவுக்கும் எனக் கொடுத்து வந்தாள்.

ஏதோ வெடிவிபத்தில் வித்யன் திடீரென இவ்வுலக வாழ்க்கையை நீத்துவிட வித்யாவின் குடும்பத்தாரது வாழ்வே சூனியமாகிவிட்டது. வித்யா, அண்ணி குழந்தைகளைத் தங்களுடன் வந்து தங்கும் படி எவ்வளவோ முயன்றும் அண்ணி தன் சுயசம்பாத்தியத்தில் தன்னையும் குழந்தைகளையும் பார்த்துக் கொள்வேன், என அன்பாக மறுத்து விட்டாள்.

காலம் தன் வேலையை அழகாகவே செய்தது. அதன் ஓட்டத்தில் பாலா மாமாவின் வற்புறுத்தலில் வித்யா, வித்யாவின் தாயார், தங்கை யாவரும் கொழும்பு வந்து

சேர்ந்தார்கள். மாமா தன் பழைய கணனி ஒன்றை அனுப்பி அவளை ஊக்குவித்தார். பயின்றாள். மேலும் படிக்கவும் மாமா உதவி செய்தார். கணனி சார்பான வேலையும் கிடைத்தது அவளுக்கு.

காலப்போக்கில் யுத்தம் மிக மிக அகோரமாகத் தலை விரித்தாடியதில், தமிழினமே கலங்கிய சூழலில் அண்ணி குழந்தைகள் என்னவானார்கள் என்று எவருக்குமே தெரியாதாம். வித்யா குடும்பத்தினரும் கொழும்பு வந்து விட்டனரே! வித்யாவும் தான் இங்கும் வந்து விட்டாளே!

என்ன வாழ்க்கை இது! ஒருவர் தன் விருப்பத்தின் பேரில் போராட்டத்தில் இணைந்ததற்காக மனைவி மக்களையும் துவம்சமாக்கும் கொடிய அரசின் சிந்தை! அந்தக்குழந்தைகள் தன் பெற்றோரைத் தெரிவு செய்தார்களா? அல்லது ஆயுதம் எடுத்துக் கொடுத்தார்களா போரிட? இப்படியாயின் அரச குற்றம் புரிந்தார் என்ற பெயரில் கைது செய்யப்படும் அரச சிப்பாய்கள் குடும்பத்திற்கு மட்டுமேன் விதிவிலக்கு?

தன் மகன் மாவீரனாய் உடலளவில் மறைந்து போனாலும் தம் வம்சம் தழைக்க தன் மகனின் பிள்ளைகள் இருக்கிறார்களே என்று தன்னைத் தேற்றியிருந்த அம்மாவுக்கு, மூத்த மகன் குடும்பத்தினர் பற்றியேதும் தகவல் கிடைக்காமை, இடிமேல் இடியாகி விட்டது இச்சேதி! குழறி அழவும் அவள் கொடுத்து வைக்கவில்லை, காரணம் அழுத மறு நிமிடம் அவள் சின்ன மகளையும் அவள் இழக்கநேரிடுமே. காரணம், அவர்கள் வாழ்ந்தது ஸ்ரீலங்காவின் தலைநகரமான கொழும்பாயிற்றே.

அம்மாவையும் தங்கச்சியையும் எப்படியும் நல்லவிதமாக வாழவைக்க வேண்டும், அண்ணியையும் பிள்ளைகளையும் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும் என அம்மனிடம் வேண்டிக் கொண்டே வருகிறாள் வித்யா. இவள் மட்டுமா! இப்படிக் கனத்த மனதுடன் எத்தனை ஆயிரம் பேர் வாழ்கின்றனர்!

இதனால் தான் வெளிநாடு வரவேண்டும் என்ற ஆசையே அவளுக்கு இருக்கவில்லை. வெளிநாட்டுக்கு

வந்தாலும், வித்யாவுக்கு தன் கடமைகளை மறந்து வாழ விருப்பமில்லை. தான் படித்த படிப்புக்கேற்ற வேலை எடுத்து மீண்டும் தன்னூர் போய் தரமான வாழ்வை அம்மாவுக்கு அமைத்துத் தர வேண்டும் என்ற வெறி அவளுள்ளே இருந்து கொண்டே இருந்தது.

மாமாவும் பட்டப்படிப்புக்கென லண்டன் அழைக்க, 'பாலா மாமா எதைச் செய்தாலும் நன்மைக்கே செய்வார்' என்ற எண்ணத்தில் இங்கு வந்து விட்டாள். இங்கு வந்தவள் சுஜித்தைக் காதலித்தது ஒரு விபத்தையொத்த, நினைத்துப் பார்க்காததொன்று. ஆனால் அவள் விருப்பப்படி சுஜித்தும் அவள் அம்மா, தங்கை எல்லோரையும் ஊருக்கு அனுப்பி வித்யா எதிர்பார்த்த நல்வாழ்வை அமைப்பதற்கு தானுமே எதிர்காலத்தில் உதவுவதாகச் சொல்லியிருக்கிறானே அது போதாதா அவளுக்கு?

# பதை பதைக்கும் மனது

வித்யா லண்டன் வந்து இன்னும் இரண்டு வாரங்களில் ஒருவருடமாகப் போகிறது. ஆனால் இன்று தான் லண்டன் வந்ததற்கே சேலை அணிந்திருக்கிறாள்.

காரணம், இது அவள் உறவினர் ஒருவர் வீட்டுக் கல்யாணம். வித்யாவின் அம்மாவும் மாமாவும் கல்யாண வீட்டுக்குச் செல்லும்படி அவளுக்கு போட்டுவிட்டார்கள் உத்தரவு.

கல்யாண வீடு செல்வதென்றால் சும்மாவா? ஈலிங் ரோட்டில் (Ealing road) உள்ள இந்தியர்களின் கடைகளில் சேலை வாங்கி அதற்கு ஏத்த அணிகளான அதே நிற கழுத்துமாலை, வண்ணக் காப்புகள் என்றெல்லாம் வாங்கி மற்றையவர்களுக்கு இணையாக முக அலங்காரம், உதட்டுச்சாயம், பொட்டு என்றெல்லாம் சேர்த்து அவள் இங்கு வரப்பட்ட பாடு அப்பப்பா!

பணம் இருக்கிறதோ இல்லையோ, பார்ப்பதற்கு வேலை இருக்கிறதோ இல்லையே இங்கு இப்படித்தான், கல்யாண வீடுகளுக்கு, கொண்டாட்டங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. (நாய் வேடம் போட்டு விட்டால் குரைத்தே ஆக வேண்டும் என்பார்களே, அது போல்!)

நம் நாட்டிலெல்லாம் படிப்பு என்ற ஒன்று தான் மூச்சாகப் பணத்தைக் கொட்டிச் செலவு செய்யத் தயாராய் இருப்பார்கள். ஆனால் இங்கு அலங்காரம் என்ற பெயரால் பணத்தை அநியாயச் செலவு செய்பவர் பலர்!

"என்ன! வித்யா பலத்த......... யோசனை!............ அம்மா கதைச்சவவோ?" என்றாள், தர்மினி எனப்படும் பக்கத்துவீட்டில் வாழ்ந்த அக்கா.

"ஒண்டுமில்லை தர்மி அக்கா!...........எங்கடை நாட்டில நடக்கிற கல்யாணங்களையும் இந்த நாட்டுக் கல்யாண வீடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கிறன்...."

"ஓ அப்படியா! அப்படி என்ன தான் வித்தியாசம்?" என்றாள்

"இஞ்சை எல்லாருமே கல்யாண வீட்டுக்கு வர்றதேயே ஒரு பெரிய விஷயமாக நினைச்சு வருகினம்! அங்கை அப்படியில்லை உடுபுடவைக்கு இந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டினம்" என்றாள் வித்யா.

"நீ சொல்றது எனக்குச் சரியா விளங்கேல்லை வித்யா" என்றாள் தர்மினி.

"ஊரிலை ஒவ்வொருத்தரும்....... தங்கட வீட்டின்ர வசதிக்கேற்றபடி வருவினம்......." என்றாள் தொடர்ந்து. "இங்கை ஒருக்காக் கட்டின சீலையைக் கூட மறுக்காக் கட்ட மாட்டினம்" என்றாள்.

"உண்மை தான். நான் ஒருக்காக் கட்டின சீலையை என்ரை தங்கச்சிக்கு அனுப்பிப் போட்டு மறுக்கா புதுச்சீலை கட்டுறனான்." என்றாள்

"பார்த்தீங்களே நீங்கள் உண்மையை ஒப்புக் கொண்டிட்டீங்கள்... அதோட அந்தச் சீலையை............ இலங்கையில இருக்கிற தங்கச்சிக்கு அனுப்புறீங்கள். ஆனால்..................... எல்லாரும் அப்படிச் செய்யினமா" என்றாள்

"நான் கட்டின அல்லது எனக்கு இனிக் கட்ட மாட்டேன் என்று தெரிந்த சீலையை நான், பார்சலிலை இலங்கைக்கு அனுப்புறது... என்ர கடமை என்று நினைக்கிறன். நான் பட்ட பாடுகளை, எங்கடை சொந்தங்கள் பற்றிய உணர்வுகளை நான் எப்பவும் ஞாபகம் வச்சுக் கொண்டு தான் வாழ்றன்" என்றாள்.

"பொறுங்கக்கா பொம்பிளையைக் கூட்டிக் கொண்டு வருகினம்" என்றாள் வித்யா மணப்பெண்ணின் பக்கம் தன் பார்வையைச் செலுத்தியபடி.

"ஓமோம் ... கவனிச்சனான், பெட்டை நல்ல வடிவு என்ன?" என்றாள் தர்மினி.

"இம்" என்றாள் வித்யா.

"பாவம் இந்தப்பிள்ளை.... ஒரு பொடியன் இவளை கட்டுறன்.......... எண்டு சொல்லிட்டு ஏமாத்திடானாம்.......... ஏனெண்டா இவளுக்குக் குடுத்த சீதனம் பத்தாதாம்" என்றாள்.

மெல்லமாக் ..... கதையுங்கோ தர்மினியக்கா! பின்னால ஆக்கள் இருக்கினம்" என்றாள் வித்யா.

சற்றுத் தாழ்ந்த குரலில் தொடர்ந்தாள்........ "ஒரு பொடியனைக் கல்யாணம் பேசி ......இந்தியாவுக்கு கூப்பிட்டு கல்யாணம் செய்யுறதெண்டு ஒழுங்காகி இருந்ததாம். .............இவவின்ரை சீதனக்காசிலை கல்யாண வீடும் செய்து.......... சாமான் சக்கட்டும் வாங்க ......அக்காக்காரி பிளான் போட்டவவாம். பார்த்தால் தீடிரென இந்தப் பிள்ளையின்ர தகப்பன் செத்துப் போனராம். அதனால சீதனக்காசு குறைஞ்சுட்டுதாம்.............. அதாலை கல்யாணம் நிண்டு போச்சாம்".

"வெளிநாட்டிலை உழைக்கிறவைக்கு தாயகத்திலை இருந்து சீதனமே?"

"அது மட்டுமே...சீதனம் வாங்கிறது ஒருவருக்கும் தெரியவும் கூடாது...எண்டு சொல்லிப் போடுவினமாம்"

"பிறகு என்னெண்டு இந்தக் கல்யாணம்?" இது வித்யாவிடமிருந்து.

"இந்த பெடியன் படிக்கிற......... காலத்திலை இருந்து இவளை லவ் பண்ணினவனாம் ....இந்தப்பிள்ளை மாட்டன் எண்டாப்போலை இவன் இஞ்சாலை வெளிநாட்டுக்கு வந்திட்டான்........... லீவிலை போகேக்கை இந்தக் கதை அறிஞ்சாப்போலை......... துணிஞ்சு போய்க் கேட்டுக் கல்யாணம் எழுதிப் போட்டு வந்துட்டான். நல்ல பெடியன். ஆள் தான் கொஞ்சம் கறுப்பு" என்றாள்.

"ஆனா மனம் வெள்ளை தர்மினியக்கா" என்றாள் வித்யா.

"அது சரி. உம்முடை மாமா சொன்னார். உமக்கும் மாப்பிளை பார்க்க வேணுமெண்டு நான் கேள்விப்பட்டேன்.......... இடையிலை நான் அறிஞ்சன் நீர் சுஜித்தோடை சுத்துறீர் எண்டு, உண்மையே?" என்றாள்.

வித்யா அச்சத்தில் உறைந்தே போனாள். "அது....... அவர்.. என்ர ஃபிறன்ட் (friend)" என்றாள் வித்யா.

தர்மினி சிரித்தபடி நக்கலாக "நான் ...இப்படி எத்தனை....... பேரைக் கண்டிருப்பன் .......சுஜித்தோடை படத்துக்குத் தனியா போற அளவுக்கு ஃபிரண்டோ(friend) ......." என்றாள் தொடர்ந்து "நீ சொல்லு நான் உன்ர மாமாட்டைச் சம்மதம் வாங்கித் தாறன்" என்றாள்.

"பிளீஸ் (please) தர்மியக்கா மெல்லமாக் கதையுங்கோ....... நீங்க சொன்னது உண்மைதான்...... சத்தியமா ............ஒருவருக்கும் சொல்லிப் போடாதைங்கோ" என வித்யா கூறி தர்மினியின் கையைப் பற்றினாள்.

"*ச்சீச்சீ*... எனக்கு அப்படி பழக்கமில்லை உம்முடை அம்மாவுக்கு இனியாவது நல்ல காலம் வரட்டும்" என்றாள்.

பெண்ணுக்குத் தாலி கட்டும் அறிகுறியாக ஒலிப்பதிவு மேளவொலி ஒலித்தது.

# உடைந்த மனது

இன்று எப்படியும் சுஜித்திடம் மாமாவைச் சந்தித்துத் தம்காதலைப் பற்றி சொல்லவைக்க வேண்டும் என்று மனதிற்குள் திட்ட வட்டமாகவே முடிவெடுத்துக் கொண்டே சுஜித்தை நீஸ்டன் (Neasden) கோவிலுக்கு வரச் சொல்லியிருக்கிறாள்.

"சுஜித்! நாங்கள் இப்படி எத்தனை நாளைக்குத் தான் ஒளிச்சுச் சுத்தறது? மாமா அறிஞ்சால் எண்டா சரியாக் கோவிப்பார்" என்றாள் வித்யா.

"அப்ப அறிஞ்சு சுத்தலாம் எண்டுறீரா?....... எனக்கு நோ பிராப்ளம் (No problem) என்றான் கேலியாக.

'நான் பகிடி விடேல்லை சுஜித்! இது மிக முக்கியமான விசயம் என்றாள் வித்யா.

' ஒகே! ஸ்வீட்டி (sweety) நாங்க, சீரியஸ்ஸாக (serious) கதைப்பம் டெல் மீ வட்ஸ் யுவர் ப்ராப்ளம் (Tell me, What's your problem?) என்றான்.

'நான் சொன்ன மாதிரி எல்லாருக்கும் எங்கட விஷயம் தெரிஞ்சு போச்சு. நாங்கள் மாமாவிட்டை இந்த விஷயத்தை தர்மினியக்கா மூலம் தெரியப்படுத்துவம்.

"ஆர் அந்த தர்மினியக்கா?" என்றான்.

"அச்சோ உங்களோடை பெரிய கரைச்சல்" செல்லமாகக் கடிந்தாள். தொடர்ந்து "நான் சொன்னனான் அல்லோ ஒரு அக்கா.......என்னைக் கண்டு...... கதைச்சவ.. அவ தான்!" கூறினாள் வித்யா.

'ஓ யா ஐ பெக் யுவக் பார்டன் (Oh Yeah I beg your pardon!) என்று தான் மறந்தமைக்காக சுஜித் மன்னிப்புக் கோரினான்.

அவன் தான் ஆங்கிலப் பாணியில் வளர்ந்தவன் அல்லவா? மன்னிப்புக் கேட்டதே வாழ்வின் ஒரு பகுதியாகக் கொண்டு விட்ட ஐரோப்பிய சமுதாயம். தொட்டதற்கும் மன்னிப்புக் கேட்பார்கள். எண்பது வீதமான மன்னிப்பு உதட்டளவில் தான். உள்ளத்திலிருந்தல்ல. இந்த நாடுகளில் உதட்டளவில் கூட மன்னிப்புக் கேட்காவிடில் அது ஒரு கடும்போக்கு எனப்பலரை மனதார வெறுக்கும் சந்தர்ப்பங்கள் கூட உண்டு, ஆசிய நாடுகளில் நாம் செய்தது தப்பு என்று தெரிந்தும் மன்னிப்புக் கேட்க மனம் இல்லாதவர் நாம். அது வேறு கதை.

'சரி.... சரி.... நீர் சொல்றதுக்கு நான் சம்மதிச்சா... நான் சொல்றதுக்கு நீர் மாட்டன் எண்டாம நீர் யேஸ் (yes) சொல்ல வேண்டும்! ஓ.கே (ok)

"நீங்கள் சொல்றதுக்கு நான் ஓ.கே......... எண்டு சம்மதிக்க வேணுமா?..... என்ன விஷயம் அது?....." என்றாள்.

'யூ நோ? மை பேர்த்டே ஸ் ஒன் ஜீலை செகண்ட் (You know! My birthday is on July second) என்று தன் பிறந்தநாள் பற்றிப் பேசினான்.

"ஓம் தெரியும், உங்கடை பிறந்தநாள் ஜீலை இரண்டாம் தேதி அதுக்கு?" புரியாமல் வினவினாள் வித்யா.

"ஐ ஆல்ரெடி ரிசேர்வ்ட் ட்டு டிக்கெட்ஸ் டு கோ டு ஸ்கொட்லண்ட் (I already reserved two tickets to go to Scotland – நான் ஏற்கனவே ஸ்கொட்லண்ட் போவற்கு 2 நுழைவுச் சீட்டுகள் எடுத்து விட்டேன்)" என்றான்.

"என்ன விசர்க்கதை கதைக்கிறீங்கள் சுஜித், ஸ்கொட்லண்ட் (Scotland) எவ்வளவு தூரம், ஒரு நாள்ல நாங்கள் போய்த் திரும்பேலுமா" என்று சினத்தாள் வித்யா.

"நாங்கள் ஏன்....... ஒரு நாள்ல திரும்போணும் ரூ ஓர் த்ரி டேய்ஸ் (two or three days – இரண்டு அல்லது மூன்று நாட்கள்) இருந்துட்டு வருவம் வித்தீ" என்றான்.

"நான் இதுக்கெல்லாம் உடன்பட மாட்டன் சுஜித்" என்றாள். "ஒரு நாள் கூட நான் அப்படி வெளியிலை போய் உங்களோடை தங்க மாட்டன். இரண்டு மூன்று நாளா? முடியவே முடியாது சுஜித்" என்று தீர்மானமாகப் படபடத்தாள்.

"வை? யூ டோன்ட் ட்றஸ்ட்(t) மீ?(Why, You don't trust me?) நீர் என்னை நம்பேல்லயா? நான் தானே உம்மைக் கல்யாணம் கட்டப்போறன்" என்று கத்தினான் சுஜித்.

"நான் உங்களை நம்புறன் சுஜித். அதுக்காக கல்யாணம் கட்டக்க முந்தி உங்களோடை வந்து தங்கித்தான் அதை உறுதி செய்யோணுமா? சும்மா என்னை இருக்க விடுங்க சுஜித்" என்றாள்.

"வித்தி!, இது இலங்கையோ, இந்தியாவோ இல்லை இது யூறப் (Europe)" என்றான்.

"எனக்கு அது தெரியும். சுஜித். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ? இல்லைத் தானே" என்றாள் வித்யா.

மேலும் "வெளிநாட்டிலை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நல்ல விஷயங்கள் இருக்கு. இது தான் நாங்கள் தெரிய வேண்டிய விஷயமில்லை சுஜித்" என்றாள்

"ஷட் அப் (Shut up)! நான் நினைக்கேல்லை உமக்கும் எனக்கும் சரி வருமெண்டு. உம்மை விட்டா எனக்கு ஒருவரும் இல்லை எண்டு நினைக்காதையும்".

"ஏன் நீங்கள் இப்படிக் கதைக்கிறீங்கள்? அப்ப ஏன் என்னை விரும்பினீங்கள்?"

"என்ரை அண்ணாவோடை பிள்ளைகளில நீர் பாசம் எண்டு தான் நான் உம்மை செலக்ட் (select) பண்ணினனான்.

இப்ப சொல்றன் உம்மைப் போல இல்லை சர்மிளா. கேட்டவுடன.... வருவாள்" முகத்தில் ஏளனம் தாண்டவமாடியது.

சுருக்கெனத் தைத்தது வித்யாவுக்கு. கோபமும் அழுகையும் ஒருங்கே பீறிட "சுஜித் வார்த்தையை அளந்து கதையுங்கோ! ..........நீங்கள் இவ்வளவு குறுகிய மனம் உள்ளவர் எண்டு......... நான் நினைக்கேல்லை. நல்லகாலம் இப்பவாவது உங்கடை............ சுயகுணம் எனக்குத் தெரிஞ்சது" என்றாள் வித்யா.

சுஜித் குறுக்கிட்டு "நான் ஏன் உமக்குப் பயப்பட வேணும். இனி நீர் யாரோ, நான் யாரோ!" என்றான்.

"மிக்க நன்றி. அப்பாடா நான் தப்பிட்டன்! நாங்கள் இனிச் சந்திக்கிறதிலை அர்த்தமேயில்லை" என்று விருக்கென நடந்தாள் வித்யா அவ்விடத்தை விட்டு.

297 ஆம் இலக்க பேருந்தில் எங்கே போகிறோம் என்ற நினைவே இல்லாமல் அமர்ந்திருக்கிறாள் வித்யா. 'எப்படியெல்லாம் நல்ல வேடம் போட்டு என்னுடன் சுஜித் பழகினானே' என்று உடைந்து போனாள்.

அதேநேரம், தனது காதலின் சாயம் இப்போதே வெளுத்து விட்டதே அது ஒரு விதத்தில் நல்லதாயிற்று என்று இறைவனுக்கு நன்றி கூறினாள். 'இப்படிப் பட்டவனை திருமணம் செய்வதை விட என்றும் கன்னியாக இருப்பதே மேல்' என நினைத்தாள்.

# உதவும் மனது

வித்யாவுக்குத் தன் படிப்பின் மீது கவனம் செலுத்துவது மிகக் கடினமாக இருந்தது. படிப்பில் சரியான கவனம் செலுத்தாவிட்டால் அவள் கட்டிய அனுமதிக் கட்டணம் வீணாகி விடுமே! படிக்கவென உட்கார்ந்தால் தான் ஏமாற்றப்பட்டமையே ஞாபகத்திற்கு வந்து அவளை வதைத்தது.

நர்மதா மூலம் இந்த விஷயங்களை அறிந்த ரோஷிணி வித்யாவுக்கு மிக ஆறுதலாக இருந்தாள். அடிக்கடி வித்யாவை எட்டிப்பார்ப்பதும் அவளுக்கு தேநீர் வைத்துக் கொடுப்பதாகவும் அக்கறை காண்பித்தாள்.

அவள் இருந்த மனநிலையில் தன்னுடைய பரீட்சை நேரத்தைக் கூட சரியாகக் கவனிக்கவில்லை. மதியம் இரண்டு மணிக்கென்றிருந்தவளுக்கு அன்ரனியின் தொலைபேசி அழைப்பு, காலை 10 மணிக்கு அவளுக்கு பரீட்சை என்பதைத் தெரிவித்திருக்கிறது.

“ரோஷிணியக்கா... ரோஷிணியக்கா.....எங்கையாவது டாக்ஸி (taxi) பிடிக்க ஏலுமா?” என்றாள்.

“ஏன் வித்யா, என்ன நடந்தது?” ரோஷிணி கேட்டாள்.

“நான் ஏதோ யோசனையிலை...... பரீட்சை நேரத்தைப் பிழையாய்ப் பார்த்துட்டன்........” என்றாள். “நான் இன்னும் முக்கால் மணி நேரத்திலை யூனியிலை நிற்கோணும்” என்றாள் வித்யா.

அதற்கு ரோஷிணி எனக்கு ஒரு டாக்ஸி டிரைவர் (taxi driver)......... தெரியும். பொறுங்கோ......... நான் கோல்(call) பண்ணிப் பார்க்கிறன்.

ரோஷிணி டைரி(diary)யில் புரட்டிப் பார்த்து ஓர் இலக்கம் பெற்றுப் பேசினாள். அவளுக்குச் சாதகமான பதில் கிட்டவில்லை. ஐந்து நிமிடங்கள் செலவானது தான் எஞ்சியது.

"வித்யா! பொறும் நான் தம்பியிட்டைக் கேட்கிறன். அவன் இப்ப வேலையில இருந்து வந்திருப்பான்" என்றாள்.

"அய்யோ! வேணாம் ரோஷிணியக்கா...... பாவம் அவர் இப்பதான் வேலையில் இருந்து வந்து....... நித்திரை கொள்ளுவார்" என்பதற்குள் "பொறும் வித்யா போன் அடிக்குது......... " என்று தொலைபேசியில் தொடர்ந்தாள்.

"தம்பீ! ஒரு உதவி ஒண்டு அவசரமாகத் தேவைப்படுது. வித்யாவை...... ஒருக்கா யுனியிலை கொண்டு போய் விட்டு விடுறீயா" என்றாள்.

வித்யாவிடம், மறுமுனைப் பதிலைத் தொடர்ந்து "தம்பி வாறானாம். நீர் ரெடியாகும். ஆள் ........அஞ்சு நிமிஷத்திலை வந்திடுவான்" என்றாள் ரோஷிணி.

சரியாக ஐந்து நிமிடங்களில் ரோஷிணியின் வீட்டுவாசலில் ஒரு வெள்ளைக் கார் வந்து நின்றது. வித்யா எட்டிப் பார்த்தாள். திடுக்கிட்டுப் போனாள். காரணம், சுஜித்தின் மகிழுந்து அது.

அவளது முகமாற்றத்தைக் கவனித்த ரோஷிணி எட்டிப்பார்த்து, தான் பதில் சொல்வதாக வித்யாவுக்கு சைகை காட்டிக் கதவை திறந்து எட்டிப்பார்த்தாள்.

""நீங்கள் யாரைப் பார்க்கோணும்" ரோஷிணி சுஜித்திடம். சுஜித், "வித்யாவை நான் சந்திக்க வேணும்" என்றான்.

"அவ யுனிக்குப் போட்டா" என்று பொய் சொன்னாள்.

அச்சமயம் சயந்தின் வெள்ளிநிறக் காரும் வந்து நின்றது. சயந்த கார் கதவைத் திறந்து எட்டிப் பார்த்து "அக்கா வித்யாவை வரச் சொல்லு" என்றான்.

வித்யா வெளியே வந்தாக வேண்டிய சூழ்நிலை. வந்தாள்.

அவளைக் கணடதும் சுஜித் "ஏய் வித்தி என்ன ஒரு கிழமைக்குள்ள ஆள் மாத்தியாச்சா வெரிகுட்(very good)" என்றான்.

ஹலோ!.. சுஜித்... நீங்க இப்படிக் கதையாதைங்கோ! வித்யாவுக்கு இண்டைக்கு ... எக்ஸாம் (Exam – பரீட்சை) அது தான் என்ரை தம்பி லிப்ட்(lift) கொடுக்கிறார்" என்றாள் ரோஷிணி.

கையைத் தட்டியாவாறே சிரித்தான் சுஜித். "நீங்கள் வித்யா... யூனி(uni)க்குப் போட்டா என்று முதல்ல பொய் சொன்னீங்கள்.. இப்ப என்னடாண்டால்... இப்படிப் பொய் சொல்றீங்கள்..." என்றான்.

ஒன்றும் புரியாத சயந்த "என்னக்கா இதெல்லாம்" என்றான் எரிச்சலுடன்.

"வித்யாவுக்கு இண்டைக்கு நீங்கள்... நாளைக்கு யாரோ........" என்று நக்கலாகச் சயந்திடம் சொன்னவன் "இப்ப தானே விளங்குது... ஏன் ஸ்கொட்லண்ட்(Scotland) வர மாட்டன் என்று........... நீர் ஏன் சொன்னனீர் எண்டு" என்றான், வித்யாவைப் பார்த்தவாறு.

"அய்யோ...... சயந்த் நீர் எடும் காரை .........:வித்யாவுக்கு எக்ஸாமுக்கு (Exam) நேரம் போகுது" என்றாள் ரோஷிணி அவசரமாக.

வித்யாவைச் சுமந்த கார் பல்கலைக்கழகம் நோக்கி விரைந்தது.

ரோஷிணி சுஜித் பக்கம் திரும்பி "நீர் பிரச்சனை எடுப்பீர்........ என்று தான் பொய் சொன்னனான்" என்றாள் கதவைச் சாத்தும் முன்பாக.

நல்லவேளை சயந்தும் ரோஷிணியும் உதவி இருக்காவிடில் வித்யாவால் பரீட்சைக்குத் தோற்றியிருக்கவே முடியாது.

# உலவும் மனது

வித்யா இன்று இலங்கை போகின்றாள். இன்று நான்கு மணியளவில் தான் அவளது விமானம் புறப்படும். அவள் எவ்வளவோ மறுத்தும் அவளது பாலா மாமா தான் விமான நுழைவுச் சீட்டுக்கான பணத்தை இணையம் மூலம் செலுத்தியிருக்கிறார்.

நேரடியான பயணம் என்பதால் பத்தரை மணி நேரத்தில் அவள் கொழும்பை அடைந்து விடுவாள். அம்மா யாரோ ஒருவரினுதவியுடன் விமான நிலையம் வருவதாகச் சொல்லியிருக்கிறாரே! ஒன்றரை வருடங்களின் பின்னர் தாயைக் காணப்போகிறோம் என்ற மகிழ்வே அவளை இயங்க வைக்கிறது.

வித்யா தனது பொருட்களை ஏற்கனவே எடுத்து வைத்திருந்தாலும் மேலும் தனது புத்தகங்கள், குறுந்தட்டுகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் யாவற்றையும் அவசர அவசரமாகத் தன் சூட்கேஸினுள் (suitcase) திணிக்கிறாள்.

அவளை வழியனுப்பவென மாமா வந்திருக்கிறார் தன் மகன் ஷ்யாமோடு. சயந்த் இவளை ஏற்றிச் செல்ல ஒரு சிற்றூந்தே(van) ஏற்பாடு செய்துள்ளான்.

ரோஷிணியும் வித்யாவை வழியனுப்ப தன் குழந்தைகள் கணவருடன் ஆயத்தமாகிறாள். வித்யாவின் மனதில் தனது ஒன்றரை வருடக்கால அனுபவங்கள் தந்த நினைவுகள், வானத்து மேகமாய் வருவதும் போவதுமாய் நிழலாடுகின்றன.

தான் லண்டன் வரும் போதுள்ள உணர்வுக்கும், ஒன்றரை வருடத்துக்குள் ஏற்பட்டுள்ள உணர்வு மாறுதலுக்கும் இடையேயான வித்தியாசத்தை அவளால் நன்கு உணரவே முடிகிறது. காலமும் சந்தர்ப்பங்களும் மனிதனை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கின்றன. வாழ்வை நினைக்கும்

போது புதிர் நிறைந்த அதே நேரம் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்பது போன்ற உணர்வு அச்சத்தையும் தருகிறது.

வாழ்வு பற்றி நிறையவே கற்று விட்டவள் போன்று உணர்கிறாள். காலத்தின் அருமை, உழைப்பின் அவசியம், எப்போதும் ஒர் ஜாக்கிரதை உணர்வு யாவும் வந்திருக்கிறதே! திடீரென போடப்பட்ட பிரேக்கினால் (brake) அதிரப்பெற்று தன் நினைவுலகத்திலிருந்து மீண்டாள்.

"விஜயாவுக்கும் விருஷிகாவுக்கும் ஒவ்வொரு கையிலை கட்டுற மணிக்கூடு வைச்சிருக்கிறன். விஜயாவுக்கு ஒரு 'பிளட் பிறஷர் (blood pressure)' பார்க்கிற எகியுப்மெண்ட் (equipment - உபகரணம்) கொடுத்து விடுறன் எண்டு சொன்னனான். கவனமா விளங்கப்படுத்தும் வித்யா " என்றான் பாலா.

'சரி மாமா' என்றாள்

போனவுடனே எங்களுக்கு போன் பண்ணுவீர் தானே என்றாள் ரோஷிணி தன் பங்குக்கு.

'ஓம் கட்டாயமா'

ஹீத்ரோ டேர்மினல் நான்கில் (Heathrow Terminal 4) எல்லோருடனும் இறங்கி வித்யா உள்ளே நடந்தாள். அங்கிருந்த கபினெட்டில் (cabinet) தனது டிக்கெட்டைக் (Ticket) கொடுத்து போர்டிங் பாஸைப் (Boarding pass) பெற்றுக் கொண்டாள். லண்டனுக்கு வரும் போது இருந்த தயக்கம் ஏதும் அவளுக்கு இப்போது இல்லை.

வந்து அனைவர்க்கும் பயணம் சென்றுவருவதற்கான விடை பெற்றுக் கொண்டாள். சயந்திடமும் தான். பயணிகள் காத்து இருக்கும் பகுதிக்குச் சென்று அமர்ந்தாள். தனித்தே இருக்கும் போது எம்மையறியாமல் எம் சிந்தை தன் வழி போகுமே! அவள் மட்டும் அதற்கு விதி விலக்கானவளா?

# மறுகும் மனது

பரீட்சையும் முடிந்த்தது. அவள் பட்டமளிப்பு விழாவும் நடந்தது. மாமாவும் அவரது மகன் ஷ்யாமும் தான் அவளது பட்டமளிப்பு விழாவுக்கு சென்றனர்.

மறுநாள் ரோஷிணியின் வீட்டில் வித்யாவின் மாமா, ரோஷிணி, ரோஷிணியின் கணவர் சுகந்தன், நர்மதா, சயந்த் அனைவரும் அமர்ந்து இருக்கின்றனர்.

சுகந்தன் அங்குள்ள நிஷப்தத்தைப் போக்கும் விதமாக "இண்டைக்கு நல்ல வெதர் (weather- காலநிலை)' என்கிறார். அத்தோடு 'வித்யாவின் மாமா பாலாவைப் பார்த்து "மிஸ்டர் (mister) பாலா!, நீங்கள் தான் விஷயத்தைத் தொடக்க வேணும்" என்கிறார்.

"எனக்கு என்ன சொல்றதெண்டே தெரியவில்லை. இதிலை வித்யாவின்ரை மனநிலை தான் முக்கியம்" என்கிறார்.

திடுக்கிட்டவளாய் வித்யா "என்ன மாமா சொல்றீங்கள்" என்கிறாள்.

நர்மதா "வித்யா நீ சின்னப்பிள்ளையில்லை உன்னுடைய அம்மா, படுற கஷ்டம் உனக்குத் தெரியும் தானே. நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்திருக்கிறம்.

மேலும் குழம்பியவளாய் வித்யா நோக்க நான் சொல்றன் வித்யா. மாமாவுக்கு உம்முடைய எல்லா விஷயமும் தெரியும் அவர் உமக்கு...." என்றாள் நர்மதா.

பாலா குறுக்கிட்டு "ஓம் வித்யா! எல்லாம் நான் அறிஞ்சனான், அதேநேரம் எனக்கு உன்னைப் பற்றி நல்லாவே தெரியும் அம்மா! உன்ர .......தனிமை .....சூழ்நிலை .....தான்

..உன்னை .......இந்த நிலைக்குத் தள்ளியிருக்கு. அருகிலிருந்த வித்யாவின் கையைப் பற்றினார் பாசத்தோடு.

"மன்னிச்சுக் கொள்ளுங்கோ மாமா! நான் உங்கடை பெயரைக் கெடுத்துட்டன்!" வித்யா அழத் தொடங்கினாள்.

பாலா மாமா "வித்யா நடந்தது, நடந்து போச்சு,........... எண்டாலும் நீ என்ர அக்காவின்ர பிள்ளை.... எண்டதை நிரூபிச்சிட்டாய். நீ அப்படி இப்படி......... தப்புச் செய்திருந்தால், நான் நிச்சயம் உடைஞ்சு போயிருப்பேன்" என்றார்.

சுகந்தன் "ஏன் நாங்கள் நடந்ததைக் கதைச்சு நேரத்தை வீணாக்க வேணும், நாங்கள் விஷயத்துக்கு வருவம்" என்றார்.

சயந்த் எழுந்து உள்ளே சென்றுவிட நர்மதா "வித்யா நான் உன்னை. என்ரை தங்கச்சியாத் தான் நினைக்கிறன். அதாலை நான் உன்னட்ட ஒரு விஷயத்தை கேட்பன். நீ யோசிச்சு ஒரு நல்ல முடிவைச் சொல்லு" என்றாள்.

"என்ன, நர்மியக்கா..ஏன் சுத்திவளைச்சுக் கதைக்கிறீங்கள்" என்றாள் வித்யா பொறுமையிழந்தவளாக.

'ஓம் வித்யா.....நாங்கள் உனக்கொரு மாப்பிளை பார்த்திருக்கிறம். அதிலை உன்ரை மாமாவுக்குப் பூரண சம்மதம். நீ என்ன சொல்றாய்?" என்ற நர்மதாவைக் குறுக்கிட்டு வித்யா "ஐயோ நர்மதாக்கா..... நீங்கள் கூட என்னைப் புரிஞ்சு கொள்ளேல்லையா..........." அழத் தொடங்கினாள்.

சுகந்தன் "என்ன வித்யா சொல்றீங்கள். ஒரு அயோக்கினைக்... சொறி (sorry) நர்மதா..... காதலிச்சதுக்காக நீர் கல்யாணமே வேணாம் எண்டு இருக்கப் போறீரா", என்றார். (சுஜித்தை திட்டியதற்காக நர்மதாவிடம் மன்னிப்புக் கோரினான்).

பாலா "வித்யாம்மா...மாமா (தன்னைக் குறித்து) எதைச் செய்தாலும் உங்கடை நன்மைக்குத் தான் செய்வேன்..." என்றார்.

"மாமா நான் பாவி.......எனக்கு........ஒண்டுமே வேணாம்" அழுதாள் வித்யா.

"நீ நினைக்கிற மாதிரி வாறவருக்கு எதையும் மறைச்சு உன்னைக் கல்யாணம் கட்டிக் குடுக்கேல்லை. அவருமே ஒரு விதத்திலை பாதிக்கப்பட்டவர் தான்" என்றார் பாலா.

ரோஷிணி "ஓம் என்ரை தம்பி சயந்த் தான் .....அந்த மாப்பிள்ளை. அவனுக்கு உன்ர................ பழக்க வழக்கம் எல்லாமே அவனுக்குப் பிடிச்சிருக்கு.... உன்னுடைய உணர்வுகளை ரொம்ப மதிக்கிறான். உனக்கு.. அவனை..... பிடிக்கேல்லையா..".என இழுத்தாள்.

வித்யா அதிர்ந்து போய் "எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு" என்று கூறியபடி உள்ளே எழுந்து சென்றுவிட்டாள். கட்டிலில் விழுந்தாள்.

சற்று நேரம் நிசப்தம் பரவியது.

சயந்த் அங்கே வந்தான். "நீங்க வித்யாவைக் கரைச்சல் குடுக்காதைங்கோ. அவவுக்கென்ன சரியெண்டு படுதோ...... அதை அவ செய்யட்டும்........." என்றாள்.

பாலா மாமா "நீர் சொல்றதை நான் நூறு வீதமும் ஒத்துக்கொள்றன் இது எல்லாம் ஆறுதலாய் எடுக்கவேண்டிய முடிவு" என்ற படி எழுந்தார் வீடு செல்ல.

பாலாவும் சயந்தும் அவ்விடத்தை விட்டகல நர்மதாவும், ரோஷிணியும் வித்யாவைச் சமாதானப் படுத்துவதற்கு அறைக்குள் சென்றனர்.

# ஆறுதல் தரும் மனது

அதிகாலை தொலைபேசியழைப்பில் வித்யாவின் தூக்கம் கலைந்தது. காலை நான்கு மணிக்குப் பின்னர் தூங்கியவளை எழுப்பியது இந்தத் தொலைபேசியழைப்பு. அவசரமாக, மெத்தைக்குள் புதையுண்ட தன் கைப்பேசியைத் தேடி எடுத்தாள்.

அவளது அம்மா தான் அழைக்கிறாரென்றதை உணர்ந்து பதை பதைத்து "அம்மா சுகமா இருக்கிறீங்களா?" என்றாள். "ஓம் பிள்ளை, நாங்கள் சுகமாய் இருக்கிறம். நீ ஒருக்காத் திருப்பி எடு. அம்மா உன்னோடை ஒருக்காக் கதைக்க வேணும்".

அவசரமாக போன் காட்டை (phone card) தன் கைப்பையினுள் இருந்து எடுத்து அனைத்து இலக்கங்களையும் அழுத்தித் தன்றாயுடன் பேசினாள்.

"என்னம்மா ஏன் போன் எடுத்தனீங்கள்? என்றாள்.

"நீ என்னட்டை வா, கஞ்சியோ கூழோ கஸ்டமோ நட்டமோ ஒண்டாய் இருந்து அனுபவிப்பம். உனக்கு வந்த கஸ்ரம் எல்லாம் அண்ணை எனக்கு போன் அடிச்சுச் சொன்னவர்" என்று அழுதாள் வித்யாவின் தாயார்.

"அம்மா நான் தான் தேவையில்லாமல் பிரச்சனையைத் தேடிட்டன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ" வித்யா அழுதாள்.

"நடந்ததைக் கதைச்சுப் பிரயோசனம் இல்லையம்மா, நீ அம்மாட்டை வா. உன்னை நினைச்சுத் தான் எனக்கு ஒரே கவலை" என்றழுதாள்.

"நான் எம் எஸ் ஸி செய்ய யோசிக்கிறன் அம்மா, நான் வரக்குள்ள எனக்கு இங்கை இருக்கிற விருப்பம் இருக்கேல்லத் தான், ஆனா நானே உழைச்சுப் படிக்கிறது ஒரு சுகம் அம்மா! ஒரு நிறைவு அம்மா!" என்றாள்.

"நீ இப்படித் தனியாக் கஸ்ரப் படாதையம்மா! உனக்கு அவன் சுஜித்தாலை பிரச்சனை வரக் கூடும் அம்மா!" என்றாள் வித்யாவின் தாய்.

"அம்மா இது லண்டன், எங்கடை நாடு போலை நினைச்சீங்களே, எனக்கு ஒரு பயமும் இல்லை" என்றாள்

"பிள்ளை நான் ஒரு விஷயம் கேட்பன், மாட்டன் எண்டு சொல்லாம ஓம் எண்டு சொல்லோணும். ஏன் நீ சயந்தைக் கட்டக்கூடாது?"

"அம்மா......... என்னம்மா நீங்கள், நீங்கள் இப்பத் தானே அங்கை வரச் சொன்னீங்கள், பிறகு நீங்களும் இப்படிக் கதைக்கிறீங்கள்?"

"மாமாவும் சயந்த் வீட்டார் எல்லாரும் என்னோடை கதைச்சவை. எனக்கும் அவை சொல்றது சரியாப்படுது. அதே நேரம் உன்ர சந்தோசம் எனக்கு முக்கியம். அது தான் இங்கை வா எண்டு சொல்லி உன்ரை மனநிலை என்னண்டு பார்த்தனான்".

"அம்மா, நான் படிக்கப் போறன். இந்தக் கதை இப்போதைக்கு வேணாம்" சிணுங்கினாள்.

"ஏன் உனக்கு சயந்தைப் பிடிக்காட்டிச் சொல்லு" என்றாள் தாய். சிறு மௌனத்துக்குப் பின் "இரண்டாம் தரம் கல்யாணம் எண்டு பார்க்கிறியா?" என்றாள்.

"*சீ ச் சீ* அப்படியெல்லாம் இல்லை. அவர் பாவம் நல்லவர். அவரை ஒருத்தி ஏமாத்திட்டா. அவருக்கு என்னைக் கல்யாணம் கட்டுறதிலை சம்மதமா? அதுவும் நாங்க யோசிக்கோணும் அம்மா!"

"சயந்தோடை நான் கதைச்சிட்டுத் தான் உனக்கே போன் அடிச்சனான். அந்த ரோஷிணி, சுகந்தன் எல்லாருக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு. உன்ரை அம்மா சொல்றன் இல்லை.

ஓமெண்டு சொல்லு அம்மா" கெஞ்சும் குரலில் விஜயா கூறினாள்.

சிறிது நேர மௌனத்தின் பின்னர்" அம்மா, நான் உங்கட விருப்பத்திற்கு மாறா ஒண்டும் இனிச் செய்ய மாட்டன். ஆனால் அதுக்கு முதல் நான் உங்களை வந்து பார்க்கோணும்" என்றாள் வித்யா.

"எனக்குப் பெரிய சந்தோஷமாய் இருக்கு. அது மட்டுமில்லை ராசாத்தி, நீ சம்மதிச்சா உன்ரை அம்மாவுக்கும் தங்கச்சிக்கும் முன்னாலை எங்கடை ஊரிலை தானம்மா கல்யாணம். இது நான் சொல்லேல்லை. உன்ரை வருங்காலக் கணவர் சயந்த் சொன்னவர்" என்றாள் கலகலப்பாக.

விமானத்தில் எல்லாப் பயணிகளும் சென்றமர அழைக்கப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து வித்யா தன் சிந்தனையிலிருந்து விடுபட்டவளாக எழுந்து நடந்தாள் விமானத்தை நோக்கி.

சுபம்.



நிலா

இயற்பெயர் : ப. உதயகுமாரி

பிறப்பிடம் : அரியாலை, யாழ்ப்பாணம்

வசிப்பிடம் : இலண்டன், இங்கிலாந்து

புனை பெயர்கள் : அரியாலையூர் அம்புயம், நிலா

இதுவரை படைத்தவை : பதினைந்துக்கும் மேற்பட்ட நாடகங்கள், நான்கு நூல்கள்

நூல்களின் விபரம் : **எந்தையும் யானும்** (நவம்பர் 2006, லண்டன்) (நிலாவினது தந்தை அமரர் சிவஞானம் பரமலிங்கத்தினதும், நிலாவினதும் கவிதைகள்)

**எழுத...எழுத...** (ஆகஸ்ட் 2006, சென்னை) (உருள் நாற்காலியில் உலவும் நிலாவின் சுயசரிதை)

**நிலாவின் இந்திய உலா** (ஆகஸ்ட் 2010, சென்னை) (2003, 2009இல் நிலாவின இந்திய பயண அனுபவங்கள்)

**உறைக்கும் உண்மைகள்** (அக்டோபர் 2010, நெல்லை)

நிலாவைப் பற்றி : கணனிவலைப் பொறியியல் பட்டதாரி (B.Eng. - Computer Network Technology - Middlesex University, London)

இலண்டன் தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் (Maths Corner, வல்லமைதாராயோ) தயாரிப்பாளர், அறிவிப்பாளர்

நிலாமுற்றம் எனும் இணையத்தள நிர்வாகி (www.nilamutram.com)